தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 02, இதழ் : 465 பிலவ வருடம், மாசி மாதம் 14ஆம் திகதி சனிக்கிழமை
(26.02.2022) ஹிஜ்ரி - 1443, ரஜப் - 24, 0115886187 - பக்கங்கள் 12

விலை ரூ.30

விடை கொடு எங்கள் நாடே...

உதட்டில் புன்னகை புதைத்தோம்..
உயிரை உடம்புக்குள் புதைத்தோம்...
வெறும் கூடுகள் மட்டும் ஊர்வலம் போகின்றோம்...

இன்று இந்தியா செல்கிறார் பெசில்

3 ஒப்பந்தங்களில் கைச்சாத்து

02 பக்கம்

உக்ரைனில் பேரழிவு!

- தாக்குதலில் சிக்கி ஏராளமான மக்கள் உயிரிழப்பு
- பொதுமக்கள் பிள்ளைகளுடன் பரிதவிப்பு - வீதிகளில் தஞ்சம்
- அணு உலைகளை கைப்பற்றியது ரஷ்யா
- 18 - 60 வயதிற்குட்பட்ட ஆண்கள் வெளியேறத் தடை
- உலக நாடுகளில் ரஷ்யா மீது பொருளாதாரத் தடை
- போர்க்குற்ற அடிப்படையில் புட்டினை விசாரிக்க ஆலோசனை

11,12 பக்கம்

ரஷ்யா - உக்ரைன் படைபலம்



ஒப்பீட்டளவில் உக்ரைனை விட ரஷ்யா மூன்று மடங்கு ஆயுத பலம் உடையது

ஏவுகணை தொழில்நுட்பத்தில் ரஷ்யா உலகின் முன்னிலையில் உள்ளது. 2020இல் ரஷ்யா 61.7 பில். அமெ. டொலர்களும் உக்ரைன் 5.9 பில். அமெ. டொலர்களும் இராணுவத்துக்கு செலவழித்துள்ளது.

உலகின் 140 நாடுகளின் இராணுவரீதியில் ரஷ்யா 2ஆம் இடத்திலும் உக்ரைன் 22ஆம் இடத்திலும் உள்ளது

தரவுகள்
PEACE RESERCH INST.
GLOBAL FIRE POWER

INFOGRAPHIC : UDESH SELVARAJ © THAMILAN GRAPHIC DESK

போர்முனையில் உக்ரைன் ஜனாதிபதி

ரஷ்யாவின் மோதலை எதிர்கொள்ளும் உக்ரைன் படையினரை உற்சாகப்படுத்த உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி போர்முனைக்குச் சென்றார்.

சுமெண்ட் சுந்தர்..

தமிழர்களுக்கு தீர்வை தருவோம் என்று அரசாங்கம் சொன்னதை சம்பந்தன் ஐயா எப்படி நம்பினாரோ உப்படித்தான், உதவுவோம் என்று உலக நாடுகள் சொன்னதை உக்ரைன் ஜனாதிபதியும் நம்பினார்...

ஐ.நா. பேரவையில் இலங்கை தொடர்பான அமர்வு மார்ச்சில்

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49ஆவது அமர்வு நாளை மறுதினம் 28ஆம் திகதிமுதல் ஏப்ரல் முதலாம் திகதிவரை ஜெனீவாவில் நடைபெறவுள்ளது.

இந்த அமர்வின்போது இலங்கை தொடர்பிலான புதுப்பிக்கப்பட்ட எழுத்துமூல சமர்ப்பணத்தை ஐ.நா. மனித உரிமைகள் ஆணையாளர் முன்வைக்கவுள்ளார்.

மார்ச் 03ஆம் திகதி இலங்கை தொடர்பில் மனித உரிமைகள் பேரவையில் உரையாடல் அமர்வு நடைபெறவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு அறிவித்துள்ளது.

எரிபொருள் நெருக்கடியால் சாரதிகள் திண்டாட்டம்

•யோ.தர்மராஜ்

நாட்டில் ஏற்பட்டுள்ள எரிபொருள் தட்டுப்பாட்டினால் எரிபொருள் நிரப்பு நிலையங்களில் வாகனங்களுக்கான எரிபொருள் வரையறுக்கப்பட்டுள்ளதாக வாகன சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

அதன்படி, ஆயிரம், 02 ஆயிரம் மற்றும் 03 ஆயிரம் ரூபா வரையில் வரையறுக்கப்பட்டுள்ளதாக அறிய முடிந்தது.

02 பக்கம்

பெருந்தோட்ட நிறுவனங்களின் மனு மீதான மார்ச்சில் விசாரணை

தேயிலை மற்றும் இறப்பர் தோட்டத் தொழிலாளர்களின் நாளாந்த சம்பளத்தை 1000 ரூபாவாக வரையறுத்து வெளியிடப்பட்ட வர்த்தமானியை செல்லுபடியற்றதாக்குமாறுகோரி 20 தோட்ட நிறுவனங்களால் தாக்கல்செய்யப்பட்டுள்ள எழுத்தாணை மனு தொடர்பிலான விசாரணை அடுத்த மாதம் 04ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

இலங்கை மீது குற்றங்களை சுமத்துவது ஏற்கவே முடியாது

வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே

•யோ.தர்மராஜ்

இலங்கையானது பயங்கரவாத நாடல்ல. பயங்கரவாதத்தை ஒழித்த நாடாகும். இங்குள்ள அனைத்து மக்களும் வாழ்வதற்கான உரிமையை பெற்றுக்கொடுத்த நாட்டின் மீது புதிய குற்றங்களை சுமத்துவது பொருத்தமானதல்ல என்பதோடு...

02 பக்கம்

பொலிஸாரை அச்சுறுத்தியதாக ஹரின், மனுஷவிடம் விசாரணை

சபாநாயகர் அறிவிப்பு

டோர்ச் லைட்டை சபைக்குள் கொண்டு வந்தமை தொடர்பில் ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான ஹரின் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார...

02 பக்கம்

உஷ்

காணி அபகரிப்புக்கு எதிராக ஜனாதிபதி செயலகம் முன்பாக தமிழ் எம்.பிக்கள் நடத்திய ஆர்ப்பாட்டத்தில் கலந்துகொள்ள அழைப்பு விடுக்காமை தொடர்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவர் ரவுப் ஹக்கீம் விசனித்திருப்பதாக தகவல்.

தமிழ் பேசும் சமூகங்களின் பொதுப் பிரச்சினைக்கு ஒன்றுபடவேமென கூறியவர்கள் இப்போது தனியாக இப்படி செய்யலாமா என்று தனது நட்பு தமிழ் அரசியல்வாதியொருவரிடம் நேற்று வினவினாராம் ஹக்கீம்.

நெருக்கடியை தீர்க்க ஒருங்கிணைந்த முயற்சியை வலியுறுத்தும் இலங்கை

உக்ரைன் தாக்குதல் தொடர்பில் அறிக்கை

உக்ரைனில் இடம்பெற்றுவரும் தாக்குதல் தொடர்பிலான இலங்கையின் நிலைப்பாட்டை விளக்கி வெளிநாட்டமைச்சு விசேட அறிக்கையொன்றை விடுத்துள்ளது. அதில் கூறப்பட்டுள்ளதாவது,

உக்ரைனில் அண்மைக்காலமாக அதிகரித்து வரும் வன்முறைகள் குறித்து இலங்கை அரசாங்கம் ஆழ்ந்த கவலை கொண்டுள்ளது.

02 பக்கம்

பழைய முறைமையில் மாகாண சபைத் தேர்தல்; தேர்தல்களில் 25 வீத பெண் பிரதிநிதித்துவம்

கலப்பு தேர்தல் முறையும் புதிய தேர்தல் முறையும் அமையும் வரை பழைய முறைமையிலேயே மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு நாடாளுமன்ற தெரிவுக்குழுவில் இணக்கம் காணப்பட்டுள்ளதாக நாடாளுமன்ற தெரிவுக்குழுவின் தலைவர் திலேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றத் தெரிவுக்குழு நேற்றுமுன்தினம் (24) நாடாளுமன்றத்தில் கூடியபோது, புதிய தேர்தல் முறைமை திறுவப்படும்வரை மாகாண சபைகளை பழைய முறைமையிலேயே நடத்த வேண்டும் எனவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் முதல் வாரத்தில் உரிய தெரிவுக்குழுவை மீண்டும் கூட்டுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

02 பக்கம்

பழைய முறைமையில்...

அனைத்து தேர்தல்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை 25வீதமாக இருக்க பரிந்துரைப்பதும், இளைஞர் பிரதிநிதித்துவத்தை கட்டாயமாக்குவதும் கொள்கையளவில் ஒப்புக் கொள்ளப்பட்ட மற்றொரு முன்மொழிவாகும்.

எரிபொருள் நெருக்கடியால்...

மோட்டார் வாகனங்களுக்கு ஆயிரம் ரூபா வரையும் கார் - பஸ் உள்ளிட்ட வண்டிகளுக்கு 02 ஆயிரம் - 03 ஆயிரம் ரூபா வரையுமே எரிபொருள் விநியோகிப்பதற்கு வரையறுக்கப்பட்டுள்ளது.

ஆனால், தற்போது வரையில் எரிபொருள் களஞ்சியப்படுத்தும் செயற்பாடுகள் முன்னெடுக்கப்படுவதால் எரிபொருள் தட்டுப்பாடு விரைவில் தீர்க்கப்படும் என திற்றோலிய கூட்டுத்தாபனம் அறிவித்துள்ளது.

இதேவேளை, எரிபொருள் தட்டுப்பாட்டினால் ஏற்படுகின்ற மின்வெட்டினால் நீர் விநியோகத்துக்கும் பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளதாக நீர் வழங்கல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறிப்பாக, எரிபொருள் தட்டுப்பாட்டால் கடந்த சில நாட்களுக்கு மேலாக நாடளாவிய ரீதியில் 03 - 05 மணி வரை மின் வெட்டு அமுல்படுத்தப்படுகின்றது. இதனால், மின்சாரத்தினால் இயங்கும் நீர் சுத்திகரிப்பு முற்றாக தடைப்பட்டுள்ளதால் எதிர்வரும் நாட்களில் நீர் விநியோகமும் தடைப்படலாம் என நீர் வழங்கல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பொலிஸாரை....

ஆகியோருக்கு எதிராக விசாரணை நடத்தப்படவுள்ள நிலையில், நேற்றுமுன்தினம் நாடாளுமன்றம் உறுப்பினர்களின் நுழைவாயிலில் நின்ற பொலிஸாரை அச்சுறுத்திய குற்றச்சாட்டு தொடர்பிலும் விசாரணை முன்னெடுக்கப்பட வுள்ளது.

சபைத் தலைவர் தினேஷ் குணவர்தன மற்றும் அரசாங்கத்தின் பிரதம கொறடா ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ ஆகியோரின் கோரிக்கைக்கு நேற்று பதிலளித்த சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன, சம்பவம் தொடர்பில் விசாரணை நடத்துமாறு பொலிஸ் மா அதிபரிடம் கோரிக்கை விடுப்பதாக தெரிவித்துள்ளார். இரண்டு எம்.பிக்கள் மீது எடுக்கப்படும் நடவடிக்கை குறித்து பொலிஸ் மா அதிபரிடம் இருந்து அறிக்கை கிடைத்தவுடன் அறிவிப்பதாகவும் சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர்கள் பொன்னாண்டோ மற்றும் நாணயக்கார ஆகியோர் எம்.பிக்கள் உரிமை எடுத்துச் செல்ல முயன்ற பொதியை அனுமதிக்க முடியாது என எம்.பிக்களிடம் கூறியபோது, எம்.பியின் நுழைவாயிலில் இருந்த பொலிஸார் மிரட்டியதாக தெரிவிக்கப்படுகின்றது.

பொதியில் சட்டவிரோதமான பொருட்கள் இருந்ததால், எம்.பிக்களை பொதியை உரிமை எடுத்துச் செல்ல விடாமல் பொலிஸார் தடுக்க முயன்றனர். எம்.பிக்கள் பொலிஸாரை பணி நிமித்தம் செய்வதாக அச்சுறுத்தியுள்ளனர்" எனவும் தினேஷ் குணவர்தன தெரிவித்துள்ளார்.

எந்தவொரு பொருளையும் உள்ளே கொண்டுவந்து சபையை ஆபத்தை நோக்கி யாரும் தள்ளக்கூடும் என்பதால், எம்.பிக்கள் மீது விரைந்து நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்" என அவர் சபாநாயகரிடம் தெரிவித்துள்ளார் .

கடந்த காலங்களில் சபையில் இவ்வாறான சம்பவங்கள் இடம்பெற்று வந்தபோதும், அது ஏறக்குறைய ஒரு மரபாகவே இருந்து வந்துள்ளதாக எதிர்க்கட்சியின் பிரதம கொறடாவான லக்ஸ்மன் கிரியெல்ல தெரிவித்துள்ளார்.

சில வருடங்களுக்கு முன்னர் முன்னாள் பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் ஆசனத்துக்கு முன்னால் மலர்வளையம் வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பங்கள் உண்டு. எனினும், இது தொடர்பாக சபாநாயகரின் முடிவை எதிர்பார்க்கிறோம் என அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

நெருக்கடியை தீர்க்க...

பிராந்தியத்தில் அமைதி, பாதுகாப்பு மற்றும் ஸ்திரத்தன்மையைப் பேணுவதற்காக, அதிகட்சமான கட்டுப்பாட்டைக் கடைப்பிடிக்குமாறும் பகைமையை உடனடியாக நிறுத்துவதற்காகப் பணியாற்றுமாறும் சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரையும் இலங்கை கேட்டுக்கொள்கின்றது.

இராஜதந்திரம் மற்றும் நேர்மையான உரையாடலின் மூலம் நெருக்கடியைத் தீர்த்துக் கொள்வதற்காக சம்பந்தப்பட்ட அனைத்து தரப்பினரும் ஒருங்கிணைந்து முயற்சிப்பது அவசியம் என இலங்கை வலியுறுத்துகிறது - என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

பெருந்தோட்ட...

சோபித்த ராஜகருணா, மாயாதுன்னே கொரயா உள்ளிட்ட மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில் மனு நேற்றுமுன்தினம் பரிசீலனைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

அக்கரப்பத்தனை தோட்ட நிறுவனம், எல்பிட்டிய தோட்ட நிறுவனம் உள்ளிட்ட 20 தோட்ட நிறுவனங்களினால் இந்த மனுத் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தோட்டத் தொழிலாளர்களின் சம்பள அதிகரிப்பினால், பெருந்தோட்டத்துறையில் நெருக்கடி ஏற்பட்டுள்ளதாக தெரிவித்து இந்த மனுதாக்கல் செய்யப்பட்டுள்ளது.

தொழில் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, தொழில் ஆணையாளர் நாயகம் உள்ளிட்ட 18 பேர் மனுவின் பிரதிவாதிகளாக பெயரிடப்பட்டுள்ளனர்.

பெருந்தோட்டத் தொழிலாளர்களின் குறைந்தபட்ச நாளாந்த சம்பளத்தை 1000 ரூபாவாக அதிகரிக்க சம்பள நிர்ணய சபை வழங்கிய அனுமதியை, வரவு-செலவுத் திட்டத்தில் உள்ளடக்கியுள்ளதாக தெரிவித்துள்ள மனுதாரர்கள் அது சட்டவிரோதமான தீர்மானம் என தெரிவித்துள்ளனர்.

அரசாங்கத்துக்கு பாரியளவு வரியை செலுத்துகின்ற மனுதாரரான நிறுவனங்கள், சம்பள அதிகரிப்பினூடாக அசௌகரியத்துக்கு உள்ளாகும் நிலை ஏற்பட்டுள்ளதாக மனுவில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

விடயங்களை ஆராய்ந்ததன் பின்னர், மனுவை விசாரணைக்கு எடுத்துக்கொள்ள தீர்மானித்திருந்த மேன்முறையீட்டு நீதிமன்றம், பிரதிவாதிகளுக்கு அறிவித்தலும் பிறப்பித்திருந்தது.

இதற்கிணங்க, பிரதிவாதிகள் தரப்பில் விடயங்கள் முன்வைக்கப்பட்டன.

மனு தொடர்பான மேலதிக விசாரணை மார்ச் 04ஆம் திகதி இடம்பெறவுள்ளது.

தமிழன் தமிழன் ஜூனியர்

கொழும்பு 01
முதல் 15 வரையிலான
பகுதிகளில் தமிழன்
(தினசரி, வாரஇதழ்),
ஜூனியர் பத்திரிகை
வீடுகளுக்கே விநியோகம்
செய்யப்படும்.

தொடர்பு - சந்திரகுமார்
0777983308

மரண அறிவித்தல்,
நினைவஞ்சலி,
மற்றும் பிறந்தநாள்
விளம்பரங்களை
குறைந்த கட்டணத்தில்
பிரசுரிக்க
வெறும் 1000/=
மட்டுமே...

அழையுங்கள்
0761393805

தமிழன் வாசகர்களே!
தமிழன் இணையத்தளத்தில்
வெளியாகும் செய்திகளை
www.thamilan.lk
ஊடாக மாத்திரமின்றி
www.thamilannews.com
மூலமாகவும் உடனுக்குடன்
அறிந்துகொள்ளலாம்
தமிழன் தமிழன்

இலங்கையும் ஐரோப்பிய ஒன்றியமும் ஒத்துழைத்துச் செயற்பட ஆராய்வு

பிரிலில் உள்ள பிரான்ஸ் வெளிநாட்டு அமைச்சில் நடைபெற்ற இந்தே - பசிபிக் ஒத்துழைப்புக்கான அமைச்சர்கள் மட்ட மன்றத்தின் பக்க அம்மாக, சர்வதேச கூட்டான் மைகளுக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் ஆணையாளர் திருமதி ஜுட்டா உர்பிலைனென வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல். பீரிஸ் சந்தித்தார்.

இலங்கைக்கும் ஐரோப்பிய ஒன்றியத்துக்கும் இடையில் ஆடைகள், கலவலுட்டப்பட்ட தேநீர், கறுவா மற்றும் மிளகு உள்ளிட்ட கலவலுட் டிப் பொருட்கள், மீன்பிடிப் பொருட்கள், மாணிக்கங்கள் மற்றும் ஆபரணங்கள் போன்ற பெறுமதி சேர்க்கப்பட்ட ஏற்றுமதிகள் மற்றும் விருந்தோம்பலுறை, தகவல் தொழில்நுட்பம், உணவு பதப்படுத்தல், மின்சாரம், வலு மற்றும் மருந்து உற்பத்தி போன்ற முன்னுரிமைத் துறைகளில் முதலீடுகளை மேற்கொள்வதுடன் அது தொடர்பான கூட்டுறவை வலுப்படுத்துவது குறித்து ஜரோப்பிய ஒன்றிய ஆணையாளர் உர்பிலைனெனுடன் பேராசிரியர் பீரிஸ் கலந்துரையாடினார்.

சுகாதாரக் கொள்கை ஒத்துழைப்பு, பிரான்தி யத்தில் உள்ள துறைமுகங்களுக்கிடையேயான இணைப்பு, தொழிற்பயிற்சி, டிஜிட்டல் மயமாக்கல் மற்றும் மக்கள் தொடர்பு கொள்வதற்கான ஏனைய அம்சங்கள் குறித்தும் இதன்போது கலந்துரையாடப்பட்டது.

இந்து சமுத்திரம் மற்றும் பசபிக் பகுதியைச் சுற்றியுள்ள நாடுகளை அணுகுவதில் ஜரோப்பிய ஒன்றியம் வெளிநோக்கிப் பார்ப்பதாகவும், இலங்கையின் வெளிநாட்டு அமைச்சரால் அடையாளம் காணப்பட்ட நடவடிக்கைகளில் தெளிவான ஒருங்கிணைப்புகள் இருப்பதாகவும் ஜரோப்பிய ஒன்றிய ஆணையாளர் உர்பிலை னென் பேராசிரியர் பீரிஸிடம் தெரிவித்தார்.

வார இறுதியில் மின்வெட்டு:

மின்சார சபைக்கு ஆலோசனைக் கோவை

வார இறுதியில் மின்வெட்டை அமுல்படுத்துவது தொடர்பில் இலங்கை பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவினால் இலங்கை மின்சார சபைக்கு விடேட ஆலோசனைக் கோவை வழங்கப் பட்டுள்ளது.

இன்றும் (26) நாளையும் (27) இரவு வேளைகளில், மின்வெட்டை தவிர்க்குமாறும் அல்லது குறைந்தபட்ச மின்வெட்டை மேற்கொள் ளுமாறும் இலங்கை மின்சார சபைக்கு அறிவுறுத் தப்பட்டுள்ளதாக ஆணைக்குழுவின் தலைவர் ஜனக்க ரத்நாயக்க தெரிவித்தார்.

வார இறுதியில் மின்சாரத்துக்கான கேள்வி குறைவாகவுள்ளமையினால், இந்த அறிவுறுத்தல் வழங்கப்பட்டுள்ளதாக அவர் கூறினார்.

கடந்த சில நாட்களாக தொடர்ச்சியாக மின் வெட்டு அமுல்படுத்தப்பட்டமையினால் இன்றும் நாளையும் இரவு வேளைகளில் மின்வெட்டை அமுல்படுத்த வேண்டாமென இலங்கை மின்சார சபைக்கு அவர் வலியுறுத்தியுள்ளார்.

அமெரிக்கத் தூதுவராக ஜூலி ஜே.சங் பதவியேற்பு

இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக ஜூலி ஜே.சங் தனது நற்சான்றிதழ்களை ஜனாதிபதி கோட்டாய ராஜபக்ஷவிடம் கையளித்ததன் பின்னர், நேற்று உத்தியோகபூர்வமாக தனது பதவியை ஆரம்பித்தார். ஜனாதிபதியின் உத்தியோகபூர்வ இல்லத்தில் இந்த நிகழ்வு இடம்பெற்றது.

"இலங்கைக்கான அமெரிக்கத் தூதுவராக பணியாற்றுவதில் நான் பெருமைப்படுகிறேன். மேலும், ஜனநாயகத்தை வலுப்படுத்தவும் செழிப்பை அதிகரிக்கவும் அனைவருக்கும் ஆரோக்கியமான, இணைக்கப்பட்ட மற்றும் பாதுகாப்பான எதிர்காலத்தை உறுதிப்படுத்தவும் இந்த நாட்டின் அரசாங்கம் மற்றும் மக்களுடன் இணைந்து பணியாற்ற நான் எதிர்நோக்குகிறேன்" என்று கூறினார் துதுவர் சங்.

தூதுவர் சங், மிக சமீபத்தில் அமெரிக்க வெளியுறவுத்துறையின் மேற்கு விவகாரங்களுக்கான பணியகத்தின் செயல் உதவி செயலாளராக பணியாற்றினார். கிழக்கு ஆசிய மற்றும் பசுபிக் விவகாரங்களுக்கான பணியகத்தில் ஜப்பானுக்கான துணை உதவிச் செயலாளராகவும், கம்போடியாவில் துணைத் தூதராகவும், தாய்வானுக்கில் பொருளாதார ஆலோசகராகவும் விரிவான அனுபவத்தைப் பெற்றுள்ளார். கூடுதலாக, அவர் ஈராக், கொலம்பியா, மியட்நாம் மற்றும் ஜப்பானில் உள்ள அமெரிக்கத் தூதரகங்களிலும் சீனாவின் குவாங்சோவில் உள்ள அமெரிக்கத் துதரகத்திலும் பணியாற்றியுள்ளார்.

வொஷிங்டனில் உள்ள கொரிய விவகார அலுவலகத்தில் பணிபுரியும்போது வட கொரியாவுடன் ஒப்புக்கொள்ளப்பட்ட கட்டமைப் பின் ஆலோசகராகவும் பணியாற்றினார்.

இன்று இந்தியா...

நிதியமைச்சர் பெசில் ராஜபக்ஷ இன்று இந்தியா வுக்கான விஜயமொன்றை மேற்கொள்ளவுள்ளார். பெசிலின் விஜயத்தின்போது பாதுகாப்புடன் தொடர்புபட்ட மூன்று உடன்படிக்கைகளில் இலங்கை கைச்சாத்திடவுள்ளது.

இலங்கை நிதியமைச்சரின் இந்திய விஜயத்தின் போது, கடல்சார் பாதுகாப்பை அதிகரிக்கும் மூன்று பாதுகாப்பு தொடர்பான உடன்படிக்கைகில் இலங்கையும் இந்தியாவும் கைச்சாத்திடவுள்ளன.

இலங்கை திருப்பி செலுத்தவேண்டிய கடன்தொடர்பில் எதிர்கொண்டுள்ள கடும் நெருக் கடிக்கு தீர்வை காண்பதற்காக இந்தியாவின் பொருளாதார உதவியை உறுதிசெய்வதற்காக பெசில் ராஜபக்ஷ இந்தியா வுடன் பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளார்.

உணவு, மருந்து, அத்தியாவசியப் பொருட்களை கொள்வனவு செய்வதற்காக இந்திய வழங்கவுள்ள ஒரு பில்லியன் அமெரிக்க டொலரே அமைச்சின் விஜயத்தின் முக்கிய விடயமாக காணப்படும். அதேவேளை, இலங்கைப் படையினரின் திறன்களை வலுப்படுத்தும் மற்றும் கடல்சார் ஒத்துழைப்பை அதிகரிக்கும் பாதுகாப்பு தொடர்பான மூன்று உடன்படிக்கைகளில் இலங்கையும் இந்தியாவும் கைச்சாத்திட்டவுள்ளன.

இரண்டு டோர்னியர் விமானம் மற்றும் 4,000 தொன் மிதக்கும் கப்பல்துறையை இலங்கை கொள்வனவு செய்யவுள்ளது.

மேலும், சுருகிராமில் உள்ள இந்திய கடற்படை யின் இந்திய பெருங்கடலுக்கான தகவல் இணைப்பு மையத்துக்கு கடற்படை தொடர்பு அதிகாரி ஒருவரை நியமிப்பதற்கு கொழும்பு இணங்கியுள்ளது.

சுருகிராமில் உள்ள இந்த நிலையம் வர்த்தக கப்பல்களையும் கடல்சார் பயங்கரவாதம், கடல்கொள்ளை போன்றவற்றையும் கண்காணிக்கின்றது. இலங்கை அதிகாரி 10 நாடுகளின் அதிகாரிகளுடன் இணைந்து செயற்படுவார். அவுஸ்திரேலியா, பிரான்ஸ், ஜப்பான் உட்பட பல நாடுகள் இந்த மையத்துக்கு தங்கள் அதிகாரிகளை நியமித்துள்ளன.

கடற்படை மிதக்கும் தளம் என்பது போர்க் கப்பல்களை விரைவாக பாதுகாப்பாக திருத்து வதற்கான ஒரு வசதியாகும். கப்பல்கள் மற்றும் நாகரிகள் போன்றவற்றை துக்கிச்செல்லும்திறன் இவற்றுக்குள்ளது.

இந்திய பயிற்சி கல்லூரிகளில், நிறுவனங்களில் இலங்கை படையினருக்கு பயிற்சியை வழங்கு வது இரு நாடுகளுக்கும் இடையில் பாதுகாப்பு ஒத்துழைப்பை அதிகரிப்பதற்கான இன்னொரு வழி என தொடர்புபட்ட வட்டாரங்கள் தெரிவித் துள்ளன.

ஆப்கானின் முன்னைய பாதுகாப்புப் படையி னருடன் இலங்கை படையினரே இந்தியாவின் அதிகளவு பயிற்சிகளை பெற்றுள்ளனர்.

இலங்கை மீது...

நாட்டின் அனைத்து உள்ளக, அரசியல் விடயங்கள் குறித்தும் கேள்வி எழுப்புவது பொருத்தமானதல்ல என்பதை ஆணையாளர் புரிந்துகொள்ள வேண்டும் என வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

அத்தோடு, இலங்கை போன்ற சிறிய நாடுகள் குறித்து மாத்திரமா ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கேள்வி எழுப்பும் என்பதையும் ஆணையாளரிடம் கேள்வி எழுப்ப வேண்டும் எனவும் அவர் தெரிவித்தார்.

அரசாங்க தகவல் தினைக்களத்தில் நேற்று (25) இடம்பெற்ற செய்தியாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 28ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. இக் கூட்டத்தொடரில் மனித உரிமை ஆணையாளரினால் இலங்கைத் தொடர்பான அறிக்கை சமர்ப்பிக்கப்படவுள்ளது. எனினும், புதிய யோசனை முன்வைக்கவோ அல்லது வாக்கெடுப்பு நடத்தப்படவோ மாட்டாது.

இலங்கைக்கு எதிராக ஆணையாளர் முன்வைக்கும் அறிக்கையிலுள்ள விடயங்களுக்கு தற்போதுவரை பதில் வழங்கப்பட்டுள்ளது. எனினும், நாங்கள் முன்வைத்த விடயங்கள் குறித்து ஆணையாளர் கவனம் செலுத்துவாரா அல்லது அவருடைய அறிக்கையையே அவ்வாறே முன்வைப்பாரா என்பதே தங்களிட முள்ள எதிர்பார்ப்பாகவுள்ளது.

எனினும், இந்த அறிக்கை குறித்து 49 ஆவது கூட்டத்தொடரில் வாத விவாதங்கள் இடம்பெறும். இதன்போது இலங்கையுடனான நட்பு நாடுகள் எங்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்பார்கள் என்ற நம்பிக்கையுள்ளது. குறிப்பாக, எங்களுக்கு ஆதரவாக குரல் கொடுப்பதாக பல நாடுகள் தற்போது வரை அறிவித்துள்ளன.

ஆணையாளரின் அறிக்கையில் உள்ளடக்கப் பட்டுள்ள விடயங்களில் 95வீதமான விடயங்கள் உள்ளக அரசியல் செயற்பாடுகளாகவே இருக்கின்றன. பொது மக்களால் சுயாதீனமாக தெரிவு செய்யப்பட்ட அரசாங்கமே நாட்டில் இருக்கின்றதே தவிர, இராணுவ ஆட்சி இங்கு இல்லை.

ஜனநாயகமான அரசாங்கமொன்றுக்கு பொது மக்களுடன் இணைந்து நாடு குறித்து சுயாதீனமான முடிவுகளை எடுப்பதற்கு உரிமையுண்டு. நாட்டின் அனைத்து விடயங்களையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கேள்வி எழுப்புமாக இருந்தால் அங்கு பிரச்சினைகள் தலைத்தூக்கும். எனவே, நாட்டின் அனைத்து உள்ளக, அரசியல் விடயங்கள் குறித்து கேள்வி எழுப்புவது பொருத்தமானதல்ல என்பதை ஆணையாளர் புரிந்துகொள்ள வேண்டும். அது ஆணையாளரின் செயற்பாடுமல்ல.

இலங்கை போன்ற சிறிய நாடுகள் குறித்து மாத்திரமா ஐ.நா. மனித உரிமைகள் பேரவை கேள்வி எழுப்பும் என்பதையும் ஆணையாளரிடம் கேள்வி எழுப்ப நேரிடும். இலங்கையானது விடுதலை புலிகளுடனான 30 வருடங்கள் போரிட்டதுடன், 2019ஆம் ஆண்டு மீண்டும் பயங்கரவாதத்துடன் பாரிக்கப்பட்ட நாடாகும். பயங்கரவாதங்களால் பாதிக்கப்பட்டுள்ள நாட்டின் மீது இவ்வாறான குற்றங்களை சுமத்துவது பொருத்தமானதல்ல. இலங்கையானது பயங்கரவாத நாடல்ல. பயங்கரவாதத்தை ஒழித்த நாடாகும். இங்குள்ள அனைத்து மக்களுக்கும் வாழ்வதற்கான உரிமையை பெற்றுக்கொடுத்த நாட்டின் மீது புதிய புதிய குற்றங்களை சுமத்துவது பொருத்தமானதா என்பதை சர்வதேச ரீதியில் ஆராய வேண்டியுள்ளது.

யுத்தங்களுக்கு பின்னர் சில சில பிரச்சினைகள் இருந்தாலும் பெரும்பாலான பிரச்சினைகளுக்கு உரிய தீர்வுகள் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது. இதனால், யுத்த காலம் குறித்து கேள்வி எழுப்புவது குறைவடைந்து வருகின்றது. தற்போதும் அரசாங்கம் மக்களுக்காக செயற்படுகின்றதே தவிர, சர்வதேசங்களை திருப்திப்படுத்துவதற்காக எவ்வித செயற்பாடுகளையும் முன்னெடுக்க வில்லை.

இதேவேளை, சிறிய நாடான இலங்கையை ஒருவிதமாகவும் இலங்கையை விட மோசமான முறையில் மனித உரிமைகள் மீறப்பட்டுள்ள பெரிய நாடுகளுக்கு எதிராக எவ்வித குற்றச்சாட்டுகளையும் முன்னெடுக்காது பக்கச்சார்பான அல்லது இரட்டேறு கொள்கைகளுக்கு அமையவே செயற்படுகின்றன.

பயங்கரவாதத்தால் பாதிக்கப்பட்ட நாட்டுக்கு எதிராக குற்றச்சாட்டுகளை முன்வைக்கின்ற போதிலும், பயங்கரவாத அமைப்புகளுக்கு எதிராக எவ்வித விடயங்களையும் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் அறிக்கையில் குறிப்பிடப்படுவதே இல்லை. பிரான்திய நாடுகளில் மிக அமைதியான நாடு இலங்கை என்பதையும் உறுதியாக கூற முடியும். இவ்வாறான நிலையில் மோசமான குற்றச்சாட்டுகளை முன்வைப்பது பொருத்தமற்றது - என்றார்.

திரவப் பால் கொள்வனவுகளில் காணப்படும் முரண்பாடுகளை உடனடியாகத் தீர்க்க நடவடிக்கை

உடனடியாக மேற்கொள்ளுமாறு விவசாய அமைச்சருக்கு ஜனாதிபதி பணிப்பு

திரவப் பால் கொள்வனவுகளில் காணப்படும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் சம்பந்தப்பட்ட ஏனைய அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

நாரஹேன்பிட்டியில் உள்ள மில்கோ தொழிற்சாலையை நேற்று (25) முற்பகல் பார்வையிட்டபோதே, ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார். பால் பண்ணையாளர்களை மேம்படுத்துதல் மற்றும் திரவப் பால் பாவனையை ஊக்குவிக்கும் நோக்கில் ஜனாதிபதி இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளார்.

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக நேற்றும் யாழில் கையெழுத்து சேகரிப்பு

(யாழ். செய்தியாளர்)

பயங்கரவாதத் தடைச்சட்டத்தை நீக்குமாறு கோரி யாழ்ப்பாணத்தில் நேற்றும் (25) கையெழுத்துப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

யாழ்ப்பாணம் - மானிப்பாய் மற்றும் சங்கானை பகுதிகளில் இலங்கை தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இந்த கையெழுத்து போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

நேற்றைய கையெழுத்துப் போராட்டத்தில் வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர்களான எஸ்.சுகிர்தன், வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை தவிசாளர் அ.ஜெபநேசன், வலிகாமம் மேற்கு பிரதேச சபை தவிசாளர் த.நடனேந்திரன், உள்ளூராட்சிமன்ற உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

சிப்பாயினால் கண்டெடுக்கப்பட்ட பணப் பை உரியவரிடம் ஒப்படைப்பு

நல்லுள்ளம் கொண்ட சிப்பாய் ஒருவர் வல்வெட்டித்துறை வைத்தியசாலைக்கு அருகில் புதன்கிழமை (23) துவிச்சக்கர வண்டி ரோந்துப் பணியொன்று மேற்கொண்ட வேளையில் வீதியில் கண்டெடுக்கப்பட்ட பணப்பையினை உரியவரிடம் ஒப்படைத்துள்ளார்.

வல்வெட்டித்துறை, இத்தியடியைச் சேர்ந்த செல்வராஜா மதன் என்பவருக்குச் சொந்தமான 24 ஆயிரத்து 955 ரூபா பணம், இரண்டு வங்கி அட்டைகள், சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் காப்புறுதி அட்டை என்பன அடங்கிய பணப்பையினை பணிநிலை சார்ஜன்ட் திசாநாயக்க என்பவர் கண்டெடுத்துள்ளார்.

52ஆவது படைப்பிரிவின் தளபதி மற்றும் 15 ஆவது கஜபா படையணியின் கட்டளை அதிகாரி ஆகியோரின் பணிப்புரையின்பேரில், அருகில் உள்ள பொலிஸ் நிலையத்துக்கு எடுத்துச் சென்று அதன் உரிமையாளர் பற்றிய தகவலைக் கண்டுபிடித்துடன் பணிநிலை சார்ஜன்ட் கே.ஏ.ஜே. திசாநாயக்க, பணப்பையினை வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையத்தில் பொலிஸார் முன்னிலையில் அதன் உரிமையாளரிடம் ஒப்படைத்தார்.

பணப்பையின் உரிமையாளர், சிப்பாயின் முன்மாதிரியான செயலை பாராட்டியதுடன், அப்பகுதி குடிமகனிடம் அவர் காட்டிய அக்கறைக்கும் நன்றி தெரிவித்தார்.

அமைச்சர் சரத் வீரசேகரவின் பாதுகாவலர் மீது தாக்குதல்

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் தனிப்பட்ட பாதுகாவலராக பணியாற்றிவரும் உதவிப் பொலிஸ் அத்தியட்சர் ஒருவர் தாக்கப்பட்டதில் படுகாயமடைந்து மருதுவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மஹரகம பகுதியில் உள்ள அவரது வீட்டில் இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக மஹரகம பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த தாக்குதலை மேற்கொண்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் மைத்துனர் சம்பவத்துக்கு பின் தப்பியோடியுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தத் தாக்குதலின்போது காயமடைந்த பொலிஸ் அதிகாரி ஸ்ரீஜயவர்தனபுர வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

இதேவேளை, இச்சம்பவத்தின் பின்னர் தப்பியோடிய நபரை கைது செய்ய பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

ரஷ்ய தூதரகத்துக்கு முன்பாக உக்ரைன் பிரஜைகள் போராட்டம்

தங்களுடைய நாட்டின் மீது போர் தொடுத்துள்ள ரஷ்யாவின் நடவடிக்கைகளைக் கண்டித்து இலங்கையில் உள்ள உக்ரைன் நாட்டுப் பிரஜைகள் ரஷ்ய தூதரகத்துக்கு முன்பாக நேற்று (25) ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். (படப்பிடிப்பு: பிரதீப் தம்பரகே)

மத்துகமவில் பெண் கொலை:

சதித்திட்டம் தீட்டியதாக பெண்ணொருவர் கைது

மத்துகமவில் கடந்த 15ஆம் திகதி மூன்று பிள்ளைகளின் தாயான 39 வயது பெண் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடைய குற்றச்சாட்டில் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கொலைக்கு சதித் திட்டம் தீட்டியதாக சந்தேகத்தின் பேரில் பெண் ஒருவர் நேற்றுமுன்தினம் (24) மாலை கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த பெண் மத்துகம பிரதேசத்தில் குற்றச் செயல்களில் ஈடுபட்டுவரும் கும்பல் ஒன்றின் தலைவரான ஷான் அரோலின் மனைவி என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும், குறித்த பெண் அமைச்சர் ஒருவரின் ஒருங்கிணைப்பு அதிகாரியாக செயற்படுவதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளதாகவும், இது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மரக்கறி விலைகளில் வீழ்ச்சி

தம்புள்ளை பொருளாதார மத்திய நிலையத்தில் மரக்கறிகளின் விலை நாளுக்கு நாள் வீழ்ச்சியடைந்து வருவதாக மத்திய நிலையத்தின் வர்த்தகர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

வியாபாரிகள் காய்கறிகளை கொள்வனவு செய்ய வராததால், காய்கறிகளின் விலை குறைந்துள்ளது.

மொத்தமாக மரக்கறிகளை கொள்வனவு செய்ய வரும் வர்த்தகர்களின் எண்ணிக்கை வீழ்ச்சியடைந்தமையே இதற்கு முக்கிய காரணம் என வர்த்தகர்கள் சங்கத்தின் தலைவரான சாந்த ஏக்கநாயக்க தெரிவித்துள்ளார்.

எரிபொருள் நிலையம் மீது சாணம் வீசி தாக்குதல்

கட்டுநாயக்க 18ஆவது மைல் பகுதியிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்றின் மீது சாணம் வீசி தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

விமான நிலையத்தினால் வழங்கப்பட்ட முன்னுரிமைக் கடிதங்களைப் பெற்றவர்களுக்கு மாத்திரம் எரிபொருள் விநியோகிக்கப்பட்டமையால் இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

விமான நிலையத்தைத் தவிர, மற்ற தனியார் வாகனங்களும் அந்த இடத்தில் எரிபொருள் நிரப்பின. ஆனால் எரிபொருள் தட்டுப்பாடு காரணமாக அந்த வாகனங்களுக்கு எரிபொருள் வழங்குவது நிறுத்தப்பட்டதாகத் தெரியவருகிறது.

மின்கம்பத்தில் ஏறிய மலைப்பாம்பு மீட்பு

மொரகஹஹேனவில் இளைஞர் முதலுதவி

அதிசக்திவாய்ந்த மின் கம்பத்தில் இருந்து ஆறுஅடி நீளமுடைய மலைப்பாம்பொன்று மீட்கப்பட்டுள்ள சம்பவம் மொரகஹஹேனவில் இடம்பெற்றுள்ளது.

மொரகஹஹேன பிரதான பஸ் நிலையத்துக்கு முன்னால் இருந்த மின் கம்பத்தில் இருந்தே இந்த மலைப்பாம்பு மீட்கப்பட்டுள்ளது. அவ்விடத்துக்கு வந்த இளைஞர் ஒருவர் மலைப்பாம்பு ஆபத்தில் இருப்பதைக் கண்டு, உடனடியாக கம்பத்தில் ஏறி அதனை மீட்டுள்ளார்.

இது தொடர்பில் வளவாத் திணைக்கள அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டதுடன் அவர்கள் அவ்விடத்துக்கு வருகை தந்தனர். மொரகஹஹேன கும்புக்வத்த என்ற இடத்தைச் சேர்ந்த 21 வயதான இளைஞரே இந்த மலைப்பாம்பை மீட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மின்சாரக் கட்டணத்தை அதிகரிக்க யோசனை

மின் கட்டணத்தை அதிகரிப்பதற்கான யோசனை, அரசாங்கத்திடம் முன்வைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதாக இலங்கை மின்சார சபையின் உயர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

2014ஆம் ஆண்டின் பின்னர் மின் கட்டணம் அதிகரிக்கப்படவில்லை என்பதுடன் 2014ஆம் ஆண்டு மின் கட்டணம் நூற்றுக்கு 25 சதவீதத்தால் குறைக்கப்பட்டதாக அவர் மேலும் கட்டிக்காட்டியுள்ளார்.

இதுதொடர்பில் மக்களின் கருத்துகளை சேகரித்து சபை தரப்பினரிடமும் நிலைப்பாடுகளை பெற்றுக்கொள்ள பொது பயன்பாடுகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும், அதன் பின்னர் மின் கட்டணத்தை அதிகரிப்பதா அல்லது நிவாரணம் வழங்குவதா என்பது தொடர்பில் அரசாங்கத்திடம் யோசனை கோரவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தினால் முன்வைக்கப்படும் தீர்மானத்துக்கமைய இறுதி முடிவுகள் எடுக்கப்படுமென அவர் மேலும் கட்டிக்காட்டியுள்ளார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

இல. 91, வீரோமா மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 077 172 1880
மினனஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com

2022, பெப்ரவரி 26ஆம் திகதி, சனிக்கிழமை

பாவம் உக்ரைன்!

தன்னை விடச் சிறிய நாடாகிய உக்ரைன் மீது தொடுத்துள்ள ஒருதலைத் தாக்குதல் என்றே இதனைச் சொல்லவேண்டும்.

முன்னர் ஈராக் மீது அமெரிக்கா தொடுத்த தாக்குதலுக்கும், தற்போது உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்திருக்கும் இந்தத் தாக்குதலுக்குமிடையே ஓர் ஒற்றுமை இருக்கிறது. இரண்டு நிகழ்வுகளிலும், எளியோரை வலியோர் தாக்குவதைத் தடுக்க இயலாமல், கையறு நிலையிலுள்ள ஓர் அமைப்பாகவே ஐ.நா. சபை இருக்கிறது என்பதே அந்த ஒற்றுமையாகும்.

உக்ரைன் மீது போர் தொடுத்தால், அதற்கான விலையை ரஷ்யா கொடுத்தாக வேண்டியிருக்கும் என்று அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் விடுத்த எச்சரிக்கையும் காற்றோடு கரைந்து போய்விட்டது.

வல்லரசு நாடுகளில் ஒன்றான ரஷ்யா, மற்றொரு வல்லரசு நாடான அமெரிக்காவால், தான் எச்சரிக்கப்படுவதை எளிமையாக எடுத்துக்கொள்ளாது என்பது நிச்சயம். உண்மையில் உக்ரைனுடனான தங்களது பிரச்சினையை விட, சர்வதேச அரங்கில் அமெரிக்க ஜனாதிபதி தமக்கு எச்சரிக்கை விடுத்ததைத் தம்முடைய தன்மானத்துக்கு விடுக்கப்பட்ட சவாலாக ரஷ்ய ஜனாதிபதி எடுத்துக்கொண்டதாகத் தெரிகிறது.

எனவேதான், ஐ.நா. சபையின் சமாதான முயற்சிகளுக்கும், அமெரிக்க ஜனாதிபதியின் இன்னொரு சுற்றுப் பேச்சுவார்த்தைக்கான அழைப்புக்கும் சற்றும் முக்கியத்துவம் தராமல் உக்ரைனைத் தாக்கத் தொடங்கிவிட்டார் புட்டின்.

அமெரிக்காவும், அதன் நட்பு நாடுகளான ஐரோப்பிய நாடுகள் சிலவும் இராணுவ ரீதியாக உக்ரைனுக்கு உதவுவது பெரும்பாலும் சாத்தியமில்லை. அப்படி ஒருவேளை ரஷ்யாவுக்கு எதிராக சில நாடுகள் இராணுவ நடவடிக்கை எடுக்க முன்வந்தால் அது மூன்றாம் உலகப் போருக்கே வழிவகுத்துவிடும் என்பதில் ஐயமில்லை.

இந்நிலையில், ரஷ்யாவின் உக்கிரத்தை எவ்விதத்திலாவது தணித்து உக்ரைனின் குடிமக்களைக் காப்பாற்ற வேண்டியது காவத்தின் கட்டாயமாகும். இதற்கான முன்முயற்சிகளை ஐ.நா. சபையின் பொதுச் செயலர் முன்னைவிடத் தீவிரமாக எடுக்கவேண்டிய தருணம் இது.

ரஷ்யா – உக்ரைன் இடையே குறுகிய காலப் போர்நிறுத்த ஒப்பந்தம் ஏற்படுவதற்கான வழிமுறைகளை உடனடியாக வகுத்து, அதைத் தொடர்ந்து பேச்சுவார்த்தைகள் நடத்தி உடனடியாக பதற்றத்தைத் தணிக்க வேண்டும். எதிர்வரும் நாட்களில் உக்ரைனில் ரஷ்யப் படைகள் மேலும் பேரழிவை ஏற்படுத்துவதற்கு முன்பாக இந்நடவடிக்கைகள் தொடங்கப்பட வேண்டும்.

தாய்வான், ஹொங்கொங் உட்னான சீன அரசின் போக்கு, மேழிலு ஆயுதங்கள் இருப்பதாகச் சொல்லிக்கொண்டு ஈராக் மீது அமெரிக்கா எடுத்த இராணுவ நடவடிக்கை, தற்போது உக்ரைன் மீதான ரஷ்யாவின் தாக்குதல்கள் ஆகிய அனைத்து நிகழ்வுகளிலும், ஐ.நா. சபை வெறும் பார்வையாளராகவே இருந்துவரும் நிலைமை இனிமேலும் தொடரக்கூடாது.

'வீட்டோ' அதிகாரத்தை வைத்திருக்கும் வல்லரசு நாடுகள், மனிதகுல நலனுக்கு எதிராகச் செயற்படுவதைத் தடுக்கவும், பலம் குன்றிய சிறிய நாடுகளை வல்லரசுகளின் ஆக்கிரமிப்பிலிருந்து காப்பாற்றவும் வல்லமை கொண்ட அமைப்பாக ஐ.நா. சபை மீள் உருவாக்கம் செய்யப்பட வேண்டும். இதற்கு வல்லரசு நாடுகளும் முழுமனதுடன் ஒத்துழைக்க வேண்டியது அவசியம்.

போர் என்று வந்துவிட்டாலே மக்கள் நலன் என்பது பின்னுக்குத் தள்ளப்பட்டுவிடும். உக்ரைன் குடிமக்கள் பெருமளவில் பாதிக்கப்படாமல் கூடிய விரைவில் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடிந்தால் மட்டுமே, அனைத்து நாடுகளும் நிம்மதிப் பெருமூச்சு விடமுடியும். ஏனெனில், கொரோனா என்ற கொடிய அரக்கனை இவ்வுலகம் வென்று விட்டதா, இல்லையா என்ற தெளிவே ஏற்படாத இந்தச் சூழலில், இன்னோர் உலகப் போர்சூழலை எதிர்கொள்ளும் திராணி எந்த ஒரு நாட்டிற்குமே இப்போது இல்லை என்பதே நிதர்சனம்.

உலகப்போர் அபாயம் உடனடியாக இல்லை என்றாலும் கூட, பெற்றோலியப் பொருட்களின் விலை உயர்வு, பங்குச்சந்தைகளின் வீழ்ச்சி உள்ளிட்ட பல்வேறு விளைவுகளை இனிவரும் நாட்களில் உலக நாடுகள் சந்திக்கவேண்டியிருக்கும்.

அமெரிக்கா முதல் அவுஸ்திரேலியா வரை ரஷ்யாவுக்கு எதிராக பெரும் தடைகளை விதிக்கின்றன. அதில் ஒருபடி மேலே போய், உக்ரைன் அகதிகளை வரவேற்போமென அமெரிக்கா கூறியிருக்கிறது. எனினும், எவருமே இப்போது உக்ரைனைக் காப்பாற்றுவதாக இல்லை.

மோதப்போனால் இவ்வாறு தடைகளை எதிர்கொள்ள நேரிடுமென புட்டினுக்கு தெரியாதா? தெரியும். அதனாற்தான் அமெரிக்காவின் வெறிட்டைப் பொத்தி கொடுத்தவுபோல் தன் வேலையை ஆரம்பித்துள்ளார் புட்டின்.

சண்டைக்கு முன்னர் உசுப்பேற்றும் வசனங்களை சொன்ன உலக நாடுகள் இப்பொழுது அமைதியாக இருக்கக் காரணம், உக்ரைனின் அணு ஆலைகள் இப்பொழுது ரஷ்யாவின் கைகளில். அதை வெடிக்கவிட்டால் முழு ஐரோப்பாவுக்கும் தாக்கம் வரும்.

பாவம் உக்ரைன். உலக நாடுகளின் பேச்சை நம்பி, எந்தவித தயார்படுத்தல்களையும் செய்யாமல் இப்போது ஆயுதம் ஏந்த தனது நாட்டு மக்களை அழைக்கிறது. நேற்று முன்தினம் மாத்திரம் 10 ஆயிரம் ஆயுதங்கள் விநியோகிக்கப்பட்டுள்ளன. இளைஞர்கள் உக்ரைனிலிருந்து வெளியேறத் தடை விதிக்கப்பட்டுள்ளது. உக்ரைனின் கீவ் நகர மேயரும், முன்னாள் குத்துச் சண்டை சம்பியனுமான விட்டலி கூட தனது நாட்டுக்காக ஆயுதம் ஏந்தத் தயாரென அறிவித்துள்ளார்.

இப்போது உக்ரைனோ, சாட்சிக்காரன் காலில் விழுவதைவிட சண்டைக்காரன் காலில் விழுந்திருக்கலாமென நினைக்கும். மறுபுறம் மனித உரிமைகளைக் காக்க உலகுக்குப் பாடம் எடுக்கும் நாடுகள், கன்முன்னே மக்கள் செத்துமடிவதை இரசித்துக்கொண்டிருப்பதுதான் கடைந்தெடுத்த அயோக்கியத்தனம்.

சோவியத் ஒன்றியத்தின் உடைப்பு முதல் கிளர்ச்சியாளர்களின் அறிவிப்பு வரை...

உக்ரைன் பிரச்சினைக்குக் காரணம் என்ன?

மூன்றாம் உலகப்போருக்கு இணையான அச்சம் உலக மக்களிடையே நிலவிவருகிறது. கொரோனாவால் ஏற்படுத்தப்பட்ட தாக்கமே குறையாத நிலையில், உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு எம்மாதிரியான விளைவுகளை ஏற்படுத்தும் என்பதை சற்றுப் பொறுத்திருந்துதான் பார்க்க வேண்டும்.

அமெரிக்கா, பிரிட்டன், ரஷ்யா ஆகிய நாடுகள் அளித்த உத்தரவாதத்தின்பேரில் உலகின் அதிகமான அணு ஆயுதங்கள் கொண்ட மூன்றாவது நாடான உக்ரைன், கடந்த 1994ஆம் ஆண்டு, தன்னிடம் இருந்த அணு ஆயுதங்களை அழித்தது. தற்போது, இதை நினைத்து வருந்தும் அளவுக்கு நிலைமை மோசமாக மாறியுள்ளது.

தற்போது, நிகழ்காலத்தில் நடைபெறும் அனைத்து சம்பவங்களுக்கும் முன்னொரு காலத்தில் நிகழ்ந்த வரலாற்று கூடுகளே காரணம். அதேபோன்றுதான், இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு நடைபெறும் மிகப்பெரிய தாக்குதலான உக்ரைன் மீதான ரஷ்யாவின் இராணுவ நடவடிக்கைக்கும், பனிப்போருக்கும் தொடர்பு இருக்கிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, எண்ணெய் விலை, பொருளாதார திரனற்றத் தன்மை, பல்வேறு இனக்குழுக்களிடையே நிலவிய பதற்ற நிலை, கோர்ப்சேவ் மேற்கொண்ட சீர்திருத்தங்கள் காரணமாக கம்யூனிசத்தை கட்டியெழுப்பி வல்லரசு நாடாகத் திகழ்ந்த சோவியத் ஒன்றியம் உடைந்தது.

கடந்த 1991ஆம் ஆண்டு, சோவியத் ஒன்றியத்தின் ஓர் அங்கமான உக்ரைன், வாக்கெடுப்புக்குப் பிறகு சுதந்திர நாடாக அறிவிக்கப்பட்டது. ஜனாதிபதித் தேர்தலில், உக்ரைன் சோவியத் குடியரசின் தலைவராக லியோனிட் கிராவ்சுக் வெற்றிபெற்றார்.

பின்னர், 1994ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் கிராவ்சுக்கை தோற்கடித்து லியோனிட் குச்மா வெற்றிபெற்றார். இது பெரும்பாலும், தேர்மையாகவும், நியாயமாகவும் நடத்தப்பட்ட தேர்தலாகவே கருதப்படுகிறது. ஆனால், கடந்த 1999ஆம் ஆண்டு, தேர்தல் முறைகேட்டின் காரணமாக, குச்மா மீண்டும் ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார்.

2004ஆம் ஆண்டு, ரஷ்ய ஆதரவு ஜனாதிபதி வேட்பாளராக விக்டர் யானுகோவிச் வெற்றிபெற்றார். ஆனால், தேர்தல் முறைகேடு நடைபெற்றதாக குற்றச்சாட்டு எழுந்து உக்ரைன் முழுவதும் போராட்டம் வெடித்தது. 'ஒரேஞ்சு புரட்சி' எனப்படும் இந்த போராட்டத்தின் விளைவாக மீண்டும் வாக்கு எண்ணிக்கை நடைபெற்றது. அதில், மேற்கத்திய நாடுகளின் ஆதரவாளராக கருதப்படும் முன்னாள் பிரதமரான விக்டர் யுஷ்செங்கோ, ஜனாதிபதியாக தெரிவுசெய்யப்பட்டார்.

பின்னர், 2005ஆம் ஆண்டு ரஷ்யாவின் கட்டுப்பாட்டிலிருந்து உக்ரைன் விடுவிக்கப்படும் என்றும், நேட்டோ மற்றும் ஐரோப்பிய ஒன்றியத்தில் இணைக்கப்படும் என்றும் யுஷ்செங்கோ உறுதிமொழி அளித்தார். என்னெய் நிறுவனத்தின் முன்னாள் தலைவரான யூலியா திமோஷென்கோவை யுஷ்செங்கோ பிரதமராக நியமித்தார். ஆனால், மேற்கூத்திய நாடுகளின் ஆதரவாளர் களாக கருதப்படும் தலைவர்கள் எதிர்ப்புத் தெரிவித்த பின்னர், அவரை பதவியிலிருந்து நீக்கினார்.

கடந்த 2008ஆம் ஆண்டு, தங்களின் கூட்டணியில் உக்ரைன் இணைக்கப்படும் என நேட்டோ உறுதியளித்தது. 2010ஆம் ஆண்டு நடைபெற்ற ஜனாதிபதித் தேர்தலில் யானுகோவிச், திமோஷங்கோவை தோற்கடித்தார். என்னெய் ஒப்பந்தத்தின் காரணமாக தனது கருங்கடல் துறைமுகத்தை ரஷ்ய கூற்படைக்கு உக்ரைன் குத்தகைக்கு விட்டது.

2013ஆம் ஆண்டு, யானுகோவிச்சின் அரசு நலம்பரில் ஐரோப்பிய ஒன்றியத்துடனான வர்த்தகம் மற்றும் கூட்டணிப் பேச்சுகளை இடைநிறுத்தி, ரஷ்யாவுடனான பொருளாதார உறவுகளைப் புதுப்பிக்க விரும்பியது. உக்ரைன் தலைகர் கீவில் பல மாதங்களாக நடைபெற்ற போராட்டத்திற்கு இது காரணமாக மாறியது. கீவ் சதுக்கத்தை மையமாக கொண்டு நடைபெற்ற இப்போராட்டம் வன்முறையாக மாறியதில் 12இற்கும் மேற்பட்ட போராட்டக்காரர்கள் மரணம் அடைந்தனர். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற வாக்கெடுப்பில் தோற்கடிக்கப்பட்ட யானுகோவிச் பதவி நீக்கப்பட்டார். இதையடுத்து, அவர் நாட்டிலிருந்து தப்பியோடினார். சில நாட்களிலேயே உக்ரைனிலுள்ள கிரிமியாவின் நாடாளுமன்றத்தை ஆயுதமேந்தியவர்கள் கைப்பற்றி ரஷ்ய கொடியை ஏற்றினர். மார்ச் 16ஆம் திகதி நடைபெற்ற வாக்கெடுப்பில் கிரிமியாவை ரஷ்யாவுடன் இணைக்க ஆதரவு தெரிவிக்கப்பட்டது. இதன் விளைவாக, கிரிமியாவை ரஷ்யா தன்னுடன் இணைத்துக்கொண்டது.

2014 ஏப்ரல் மாதம், டான்பாஸின் கிழக்குப் பகுதியை சுதந்திர நாடாக ரஷ்ய ஆதரவு கிளர்ச்சியாளர்கள் அறிவித்தனர். இப்போது நடைபெறும் போருக்கு இந்த அறிவிப்பு மிக முக்கிய காரணமாக பார்க்கப்படுகிறது.

மரக்கறிகளின் விலை அதிகரிப்பு வியாபாரிகள் - மக்கள் பாதிப்பு

அதிக ஹோட்டல்கள் மூடப்படக்கூடிய அபாயத்திலுள்ளதாக உரிமையாளர்கள் கவலை

(செ.திவாகரன்)

நாட்டில் தற்போது உக்கிரமடைந்துள்ள உரப்பிரச்சினையும், கடந்த மாதங்களில் ஏற்பட்ட வெள்ள அனர்த்தமும் ஜனவரி மாதம் பெய்த பனிப்பொழிவுக்கு மத்தியில் விவசாயிகள் தமது மரக்கறிகளை பாதுகாத்து வருகின்றனர். எனினும், தற்போதைய நிலையில் உரம் மற்றும் கிருமிநாசினி இன்மையாலும் காலநிலை சாதகமாக கிடைக்காமையாலும் அநேகமானோர் மரக்கறி பயிர்ச்செய்கையில் இருந்து விலகியுள்ளனர்.

இவ்வாறானதொரு பின்னணியில் நுவரெலியாவில் 07 வருடத்துக்கு மேல் மரக்கறி பயிர்ச்செய்கையில் ஈடுபடும் நா.சக்திவேல் எனும் விவசாயி இவ்வாறு கருத்து தெரிவித்தார்.

"நான் நுவரெலியாவில் சுமார் 07 வருடத்துக்கு மேல் விவசாயம் செய்து வருகின்றேன். தற்போது மரக்கறிச் செய்கை கடுமையாக வீழ்ச்சியடைந்துள்ளது. பல இலட்சம் ரூபா நஷ்டம் மற்றும் செலவழித்த பணமும் கூட கிடைக்காமல் பாரிய இழப்பை சுமக்க வேண்டியுள்ளது.

பிரதான பயிர்களை உரிய முறையில் பராமரிப்பு செய்ய உரம், கிருமிநாசினி இல்லாததால் கிழங்கு மற்றும் பிற மரக்கறி தொடர்ந்தும் பாதிக்கப்பட்ட வண்ணம் உள்ளது. நுவரெலியாவில் பிரதான வாழ்வாதாரமாக விவசாயத்தை மாத்திரம் நம்பியுள்ளவர்கள் தற்போது அதிக விலைக்கு விற்கும் உரம் வாங்குவதற்கும் கடன் வாங்குவதற்கும் வாங்கும் பணத்தினை கூட திருப்பி அடைக்க விளைச்சல் இல்லாமல் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மரக்கறி விலைகள் தற்போது உயர்வாக காணப்பட்டாலும் விளைச்சல் மந்த நிலையில் உள்ளதால் அறுவடை பெரிதும் பாதிக்கின்றது. இதனால் அதிகமானவர்கள் குறுகிய கால பயிர்கள் மூலம் இலாபம் பெற பயிரிட முயன்றாலும் அதுவும் பயனளிக்கவில்லை.

தற்போது யாழ்ப்பாணம் போன்ற இடங்களில் இருந்து போஞ்சி போன்ற அதிகமான மரக்கறிகள் வரத்தொடங்கியுள்ளன. யாழ்ப்பாணத்தில் லீக்ஸை தவிர ஏனைய மரக்கறி வகைகள் அனைத்தும் பயிரிடுகின்றனர்.

விவசாயத் தோட்டத்துக்கு வரும் தொழிலாளர்கள் ஆயிரத்து 800 ரூபா சம்பளம் பெற்றனர். ஆனால் தற்போது 02 ஆயிரத்து 300 ரூபா கொடுக்காவிட்டால் வேலை செய்ய மாட்டோம் என்று கூறுகின்றனர். 02 ஆயிரத்து 300 சம்பளம் உயர்த்தப்பட்டு காலை மற்றும் மதியம் உணவு கொடுக்கும்போது மொத்தமாக 03ஆயிரம் ரூபா ஒருவருக்கு ஒரு நாளை செலவாகின்றது. ஆனால், வருமானம் குறைவாகவே இருக்கின்றது.

நுவரெலியா மத்திய சந்தை வியாபாரி;

தற்போது அதிகமாக விவசாயிகள் மாற்றுத் தொழிலை நாடி செல்கின்றனர். விவசாயத்தில் அக்கறை காட்டுவது குறைவாக உள்ளதால், மரக்கறிகள் சந்தைக்கு வருவது குறைவாக உள்ளன. இதனால், மரக்கறி விலைகள் அதிகரித்து செல்கிறது. விலை அதிகரிப்பால் மரக்கறிகளை கொள்வனவு செய்வதில் மக்கள் தயக்கம் கொள்கின்றனர்.

வியாபாரம் வெகுவாக குறைந்துள்ளது. மீதமான மரக்கறி வகைகளை குப்பையில் வீச வேண்டிய துர்ப்பாக்கிய நிலைமைக்கு தள்ளப்பட்டுள்ளோம்.

எங்கள் கஷ்டத்துக்கு மத்தியில் சில மரக்கறி வகைகளை குறைவான விலைக்கு விற்பனை செய்கின்றோம். இதன்படி திங்கட்கிழமை ஒரு கிலோ கரட் 560 முதல் 580 ரூபாவுக்கும் ஒரு கிலோ கத்தரிக்காய் 280 முதல் 300 ரூபாவுக்கும் ஒரு கிலோ தக்காளி 320 முதல் 340 ரூபாவுக்கும் ஒரு கிலோ பாகற்காய் 400 முதல் 420 ரூபாவுக்கும் ஒரு கிலோ பீட்ரூட் 350 முதல் 370 ரூபாவுக்கும் விற்பனை செய்கின்றோம் என்றார்.

ஹோட்டல்கள் மூடப்படும் அபாயம்;

மரக்கறி விலை அதிகம், ஹோட்டல்கள் மூடப்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக உரிமையாளர் ஒருவர் தெரிவித்தார். நாட்டில் நிலவிவரும் சமையல் எரிவாயுவுக்கான தட்டுப்பாட்டு நிலையினாலும் மரக்கறி விலை அதிகரிப்பினாலும் ஹோட்டல் மூடப்படும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளதுடன், தொடர்ந்து தமது தொழிலை முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலையில் இருக்கின்றதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

எரிபொருள் தட்டுப்பாடு, மரக்கறி விலை ஏற்றம் என்பனவற்றினால் ஒரு பொதி மரக்கறி சாப்பாட்டின் விலை 200 முதல் 220 ரூபாவாக உயர்வடைந்துள்ளது என அவர் தெரிவித்துள்ளார்.

மறைந்த ஊடகர் சுனிலின் இறுதிக் கிரியை இன்று

மறைந்த சிரேஷ்ட ஊடகவியலாளர் சுனில் மாதவ பிரேமதிலக்கவின் இறுதிக் கிரியைகள் இன்று மாலை 05 மணியளவில் தலாஹேன பொது மயானத்தில் இடம்பெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஹொரணை தக்சிலா மத்திய கல்லூரி மற்றும் கொழும்பு ஆனந்த கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவரான சுனில் மாதவ, ஊடகத்துறைக்கு சிறப்பான பங்களிப்பை வழங்கியுள்ளார்.

சிலுமின, திவயின ஆகிய பத்திரிகைகளில் நீண்ட காலம் பணியாற்றியதுடன் விகல்ப பத்திரிகையில் அரசியல் கட்டுரைகளையும் எழுதிவந்தார். அத்துடன் லக்மிண, லக்திவ, ஹிரு ஆகிய பத்திரிகைகளின் ஆரம்பகர்த்தாக்களில் ஒருவராகவும் விளங்கினார்.

ஊடகவியலாளர்கள் மத்தியில் மிகச்சிறந்த நட்புறவைப் பேணிய சுனில் மாதவ, 'நேர்மையானவனின் தினக்குறிப்பு' என்ற தொடர் நாவல் மூலம் சிங்களமொழி இலக்கியத் துறையில் புதிய மாற்றத்தை ஏற்படுத்தியவராவார். அத்துடன் பல்வேறு கவிதை, நாவல் மற்றும் மொழிபெயர்ப்பு நூல்களையும் அவர் வெளியிட்டுள்ளார். ஊடகத்துறைக்கு அவர் வழங்கிய பங்களிப்புக்காக கலாபூஷணம் விருது வழங்கி அண்மையில் கௌரவிக்கப்பட்டிருந்தார்.

சுனில் மாதவ பிரேமதிலக்க கடந்த 23ஆம் திகதி தனது 78 ஆவது வயதில் காலமானமை குறிப்பிடத்தக்கது.

சிறுத்தைப் புலியின் சடலம் நோட்டன் பிரிட்ஜில் மீட்பு

(எம். கிருஸ்ணா)

நோட்டன் பிரிட்ஜ் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிட்போட் பகுதியில் தனியார் தோட்டப்பகுதியிலிருந்து இறந்த நிலையில் சிறுத்தைப் புலியொன்று நேற்று (25) மதியம் மீட்கப்பட்டுள்ளதாக நோட்டன் பொலிஸார் தெரிவித்தனர்.

நேற்று முற்பகல் குறித்த பகுதிக்கு தொழிலுக்குச் சென்றவர்களால் சிறுத்தைப் புலியின் சடலமொன்று இருப்பதாக பொலிஸாருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து, நல்லத்தண்ணி வனவிலங்கு அதிகாரிகளுக்கு பொலிஸார் அறிவித்ததையடுத்து, குறித்த புலியின் சடலம் ரந்தனிகலவில் உள்ள வனவிலங்கு வைத்தியசாலைக்கு பரிசோதனைக்காக கொண்டு செல்லப்பட்டுள்ளது.

சுமார் 08 வயது மதிக்கத்தக்க ஆண் சிறுத்தைப் புலியின் சடலத்தில் காயங்கள் இருப்பதாகத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சப்ரகமுவ கல்விச் செயலருடன் ஆசிரிய தொழிற்சங்கங்கள் சந்திப்பு

சப்ரகமுவ மாகாண கல்வி செயலாளருக்கும் ஆசிரியர் தொழிற்சங்கங்களுக்கும் இடையிலான பேச்சுவார்த்தை மின்னேரபிட்டிய கல்வி அபிவிருத்தி நிலையத்தில் நேற்று (25) நடைபெற்றது.

சப்ரகமுவ மாகாணத்துக்கு புதிய கல்விச் செயலாளராக நியமனம் பெற்ற சுஜானி சு. விஜயதுங்க, மேலதிக செயலாளர் ரவீந்திர மாலினி மற்றும் மாகாண கல்வித் திணைக்களத்தின் மேலதிக கல்விப் பணிப்பாளர் ஹிரோசி குணவர்தன உள்ளிட்டோர் இதன்போது கலந்து கொண்டனர். இங்கு ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பான பல விடயங்கள் குறித்து பேசப்பட்டன. இலங்கை ஆசிரியர் சேவை சங்கத்தின் உபதலைவர் சுந்தரலிங்கம் பிரதீப் பேசுகையில், தமிழ் மொழிமூல பாடசாலைகளின் பிரச்சினைகள் மற்றும் ஆசிரியர்கள் தொடர்பில் பல விடயங்களை கலந்துரையாடினார்.

புதிய நியமனங்கள் வழங்கப்படுகின்றபோது ஆசிரியர் வெற்றிடம் நிலவுகின்ற பாடசாலைக்கு நியமிப்பது முக்கியமானதாகும்.

ஆசிரியர் நியமனங்களின்போது உயர்தர வகுப்புகளைக் கொண்ட பாடலைகளுக்கும், பாட வெற்றிடம் நிலவுகின்ற பாடசாலைகளுக்கும் முன்னுரிமை வழங்க வேண்டும் என்றும் கோரிக்கையை முன்வைத்தார்.

சுற்றறிக்கைகளை வெளியிடும்போது அவற்றை தமிழ் மொழிமூலம் வெளியிட வேண்டும் என்றும் கோரிக்கை விடுத்தார்.

சுந்தரலிங்கம் பிரதீப் முன்வைத்த கோரிக்கைக்கு மாகாண கல்வி அமைச்சின் செயலாளர் மிக விரைவில் தீர்வு காணப்படும் என உறுதி அளித்தார்.

நல்லூர் பிரதேச செயலகமும் யாழ்ப்பாண மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினரும் இணைந்து நல்லூர் பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் வீதிகளில் அநாவசியமாக நிற்போர் மற்றும் வீதிகளில் முகக்கவசமின்றி பயணிப்போருக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று (25) முன்னெடுக்கப்பட்டன. (யாழ். செய்தியாளர்)

ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

25.02.2022 நாணய மாற்று வீதம்

நாணயம்	கொள்வனவு வீதம்	விற்பனை வீதம்
அவுஸ்திரேலியன் டொலர்	03 7132	035 6632
கனேடியன் டொலர்	043 21	048 7320
சீன யுவான் (ரென்மின்பி)	2 7177	21 828
யூரோ	111 0417	120 5524
ஜப்பான் யென்	0 6 87	0 6627
சிங்கப்பூர் டொலர்	035 0 77	04 7283
ஸ்ரேலிங் பவுன்	153 3882	161 8000
சுவிஸ் பிரான்ங்	102 3 7	11 86 2
ஐ.அ.டொலர்	087 4 7	1 1 8881

நாடு	நாணயம்	விற்பனை வீதம்
பஹ்ரைன்	பஹ்ரைன் தினார்	425 5234
குவைட்	குவைட் தினார்	556 6888
ஓமான்	ஓமான் றியால்	414 4145
கட்டார்	கட்டார் றியால்	44 1250
சவூதி அரேபியா	சவூதி அரேபிய றியால்	42 8177
ஐக்கிய அரபு இராச்சியம்	ஐக்கிய அரபு இராச்சிய திர்ஹம்	44 74

ரஞ்சனுக்காக சர்வதேசம் செல்வோம் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் தெரிவிப்பு

தற்போதைய சூழ்நிலையில் ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்காக சர்வதேச சமூகத்தின் உதவியை நாடவேண்டியுள்ளதாகவும், இதற்கு ஹரின் பெர்னாண்டோ தலைமையிலான ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் குழு தலையீடு செய்யும் எனவும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச தெரிவித்தார்.

வெலிக்கடை சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள ரஞ்சன் ராமநாயக்கவை நேற்று (25) காலை பார்வையிட சென்றதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்துத் தெரிவிக்கும்போதே எதிர்க்கட்சித் தலைவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது,

மக்கள்சார் மனிதாபிமானியான ரஞ்சன் ராமநாயக்கவின் விடுதலைக்காக ஜனநாயகப் போராட்டத்தில் ஈடுபட்ட வண்ணம் இருக்கிறோம். குறிப்பாக, அவர் தற்போது சிறைப்படுத்தப்பட்டிருப்பது நமக்கும் நாட்டுக்கும் இழப்பாகவே பார்க்கிறேன். தற்போதைய நிலையில், ரஞ்சன் ராமநாயக்க விடுதலை செய்யப்பட்டிருந்தால், இந்நாட்டில் துன்பப்படும் மக்களுக்கு உதவுவதில் அவர் முக்கியப் பங்காற்றியிருப்பார்.

ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பூரண சுதந்திரம் வழங்குமாறு ஜனாதிபதியிடம் நான் பலமுறை கோரிக்கை விடுத்துள்ளேன். அண்மையில் இரு நாட்களாக அந்த கோரிக்கையை முன்வைத்தோம். ஆனால் அவருக்கு இன்னும் அந்த விடுதலை வழங்கப்படவில்லை. ரஞ்சன் ராமநாயக்கவுக்கு பூரண சுதந்திரம் வழங்குமாறு மனிதாபிமானத்தின், கருணையின் பெயரால் மீண்டும் கேட்டுக் கொள்கின்றோம். அத்துடன், ரஞ்சன் ராமநாயக்கவின் பூரண விடுதலையை இந்த நாட்டில் வென்றெடுப்பதே எமது எதிர்பார்ப்பாகும். வேறு எந்த வெளிதரப்பின் தலையீட்டின் மூலமாகவும் வெற்றிக்கொள்ளும் விருப்பம் எங்களுக்கு இல்லை. ஆனால் உள்நாட்டில் அந்த வெற்றியை எங்களால் அடையமுடியாவிட்டால், இந்த மனிதாபிமானமிக்கவரின் சுதந்திரத்துக்காக, சாத்தியமான, நியாயமான, அனைத்து ஜனநாயக செயல்முறைகளையும் நாம் மேற்கொள்ள வேண்டியிருக்கும் எனக் கூறுகிறேன்.ஆனால், அந்தச் செயற்பாட்டில் எமது நாடு, எமது இறைமை, தேசிய ஒருமைப்பாடு, மனித உரிமைகள் மற்றும் மனித சுதந்திரத்தை மீறுவதற்கு நாம் எந்த வகையிலும் தயாராக இல்லை.

அதற்குக் காரணம் நாங்கள் உண்மையான தேசப்பற்றாளர்கள். நாட்டை உண்மையாக நேசிக்கும் இந்த தாய்நாட்டின் பொது சேவையாளர்கள் நாங்கள். எனவே, ரஞ்சன் ராமநாயக்கவின் பூரண விடுதலையை வெல்வதே எமது ஒரே நோக்கமாகும். அதற்காக, சட்டரீதியாகவும், ஜனநாயக ரீதியாகவும், உள்நாட்டிலும் சர்வதேச மட்டத்திலும் எம்மால் இயன்ற மிக உயர்ந்த பங்களிப்பை செய்ய உறுதி பூண்டுள்ளோம் என்றார்.

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
கலை, இலக்கிய மற்றும் பல்சுவை அம்சங்களுடன்...
Thamil Murasu
மலர் : 1 இதழ் : 33 - 27.02.2022
வார வெளியீட்டின் இலவச இணைப்பிதழாக

திறைசேரிக்குச் செலுத்தவேண்டிய உரிமைத் தொகையை உரிய முறையில் செலுத்த நடவடிக்கை எடுக்கவேண்டும்

புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கப் பணியகத்துக்கு கோப் குழு அறிவுறுத்தல்

புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கப் பணியகத்தின் ஊடாக அரசாங்கத்தின் திறைசேரிக்கு செலுத்தப்படவேண்டிய உரிமைத்தொகை பல வருடங்களாக உரிய முறையில் பரிமாற்றம் செய்யப்பட வில்லையென்றும், இதனை உரிய முறையில் செயற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என்றும் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் குழுவின் (கோப் குழு) தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் பேரசிரியர் சரித ஹேரத் வலியுறுத்தினார்.

புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கப் பணியகம் கடந்த புதன்கிழமை (23) அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தபோதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இதற்கமைய 2015 முதல் 2021 வரையான காலப்பகுதிக்குள் பணியகத்தினால் உரிமைத்தொகை உரிய முறையில் சேகரிக்கப்பட்டிருந்தாலும், அது திறைசேரிக்கு அனுப்பப்படாமல் பணியகத்தின் நிலையான வைப்புக் கணக்குகளில் வேண்டப்படாது வந்தமை குறித்தும் குழுவில் கலந்துரையாடப்பட்டது.

2016ஆம் ஆண்டுமுதல் 2021ஆம் ஆண்டுவரையான காலப் பகுதியில் சேகரிக்கப்பட்ட உரிமைத்தொகை 16,59,10,75,088 ரூபாவாகும் என்பதுடன், திறைசேரிக்கு பரிமாற்றப்பட்டுள்ள தொகை 8,52,02,35,812 ரூபா மாத்திரமாகும். உரிமைத்தொகை சரியான முறையில் திறைசேரிக்குச் சென்றடைய வேண்டும் என கோப் குழுவின் தலைவர் இதன்போது கட்டிக்காட்டினார்.

புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கப் பணியகத்தில் அனுமதிக்கப்பட்ட பணியாளர் தொகையைவிட அதிகமாக சேவைக்கு இணைத்துக்கொள்ளப்பட்ட ஜீ.எஸ்.எம்.பி. தொழில்நுட்ப சேவை (தனியார்) நிறுவனத்தின் பணியாளர்களுக்குப் பணியகத்தின் ஊடாக சம்பளம் வழங்கப்பட்டமை குறித்தும் கோப் குழு கலந்துரையாடியது. இது குறித்து விசாரணை நடத்தி, பணியகத்தில் வெற்றிடங்கள் காணப்பட்டால் அவற்றை நிரப்புவதற்கு நிர்வாக சேவைத் தினைக்களத்தின் அனுமதியுடன் நடவடிக்கை எடுக்குமாறும் கோப் குழுவின் தலைவர், அமைச்சின் செயலாளருக்குப் பணிப்புரை விடுத்தார்.

அதேநேரம், 2019 செப்டெம்பர் 19ஆம் திகதிய 29/2019ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிநிருபத்துக்கமைய நிர்வாக சேவைத் தினைக்களத்தின் அனுமதிக்கப்பட்ட எண்ணிக்கையை அதிகரிக்காமல் தற்காலிக, அமைய, நாட்சம்பளம், ஒப்பந்தம் அல்லது சலுகை ஆகிய அடிப்படையில் உள்ளவர்களை பணியகத்தினால் நிரந்தரமாக்க முடியுமாக இருக்கும் நிலையில், 189 பேர் நிரந்தரமாக்கியமை தொடர்பிலும் குழு கவனம் செலுத்தியது. நிர்வாக சேவைகள் தினைக்களத்திற்கு தமது ஊழியர்களின் தேவைகள் குறித்து மீண்டும் தெரிவிக்குமாறும் முறையான நடைமுறைகளுக்கு இணங்க இப்பிரச்சினையைத் தீர்க்குமாறும், கோப் குழுவின் தலைவர், பணியகத்தின் தலைவருக்கும், பிரதம நிறைவேற்று அதிகாரிக்கும் சிபாரிசு செய்தார்.

25,81,633 ரூபா செலவில் பணியகத்தினால் தயாரிக்கப்பட்டவிரிவான திட்டத்திற்கிணங்க 2019-2023ஆம் ஆண்டுக்கான செயற்றிட்டம் இதுவரை சரியான முறையில் பணிப்பாளர் சபையின் ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்படவில்லை என கோப் குழு குறிப்பிட்டது. இதற்கான செயற்றிட்டம் பணிப்பாளர் சபைக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளதாக பணிய அதிகாரிகள் தெரிவித்தனர்.

கூடந்த காலப் பகுதிக்குள் பணியகத்தினால் கணக்காய்வுக் குழுக் கூட்டத்தை நடத்துவது குறைக்கப்பட்டமை குறித்து கோப் குழு கவனம் செலுத்தியதுடன், கணக்காய்வுக் கூட்டத்தை உரிய முறையில் நடத்துமாறும் வலியுறுத்தியது.

புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கப் பணியகம் தொடர்பில் 2019 செப்டெம்பர் 18ஆம் திகதி கோப் குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பான முன்னேற்றம் குறித்து நாடாளுமன்றத்துக்கு அறிவிக்கப்படாமை குறித்தும் கோப் தலைவர் கவனத்திற்கு கொண்டுவந்தார். குழுவினால் முன்வைக்கப்பட்ட பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் நாடாளுமன்றத்திற்கு தெரியப்படுத்துவது மிகவும் அவசியமானது என குழுவின் உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

கோப் குழுவின் பரிந்துரைகளை நடைமுறைப்படுத்துவது தொடர்பில் திருப்திகரமான பதில்கள் வழங்கப்படாமையால் இந்த விசாரணைகளை ஒரு மாதகாலத்துக்கு ஒத்திவைக்கப்பட்டதுடன், ஒரு மாதத்தின் பின்னர் மேலே குறிப்பிடப்பட்ட இரண்டு நிறுவனங்களையும் மீண்டும் கோப் குழு முன்னிலையில் அழைப்பதற்கும் தீர்மானிக்கப்பட்டது.

அதேநேரம், ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரின் அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் முதலாவது அறிக்கை குழு உறுப்பினர்களின் ஒப்புதலுக்காக வழங்கப்பட்டது. முதலாவது கூட்டத் தொடரின் மூன்றாவது அறிக்கை சபையில் சமர்ப்பிக்கப்படாமையால் அதனை 25ஆம் திகதி சமர்ப்பிப்பதற்கும் அனுமதி வழங்கப்பட்டது.

இக்கூட்டத்தில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, இராஜாங்க அமைச்சர்களான இந்திக்க அநுருத்த, கலாநிதி நாலக கொடஹேவா, நாடாளுமன்ற உறுப்பினர்களான சுசில் பிரேமஜயந்த, ஜகத் புஷ்பகுமார, பாட்டலி சம்பிக்க ரணவக்க, கலாநிதி ஹர்ஷ டி சில்வா, ஏரான் விக்ரமரட்ன, சானக்கியன் ராசமாணிக்கம், நளின் பண்டார, பிரேம்நாத் சி.தொலவத்த ஆகியோர் கலந்துகொண்டனர். சுற்றாடல்துறை அமைச்சர் மஹிந்த அமரவீர கண்காணிப்பு உறுப்பினராகக் கலந்துகொண்டார்.

சுற்றுக்குழுல் அமைச்சின் செயலாளர், புவிச்சரிதவியல் அளவைச் சுரங்கப் பணியகம் மற்றும் ஜீ.எஸ்.எம்.பி. தொழில்நுட்ப சேவை (தனியார்) நிறுவனம் ஆகியவற்றின் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

ஹப்புகஸ்தென்ன தோட்ட பிரஜாசாலை மண்டப புனரமைப்புப் பணிகள் ஆரம்பம்

(செ.தி.பெருமாள்)

ஜனாதிபதியின் "சுபீட்சத்தின் நோக்கு" விசேட வேலைத்திட்டத்தின்கீழ் கடந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் வெற்றிபெற்ற உறுப்பினர்களுக்கு தலா 4 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதோடு அதன் ஆரம்பக்கட்ட வேலைகளை முதல் காலாண்டில் செய்து முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் மஸ்கெலியா பிரதேச சபையின் மவுசாகலை வட்டாரத்தில் வெற்றிபெற்ற பழனியாண்டி ஆனந்தனுக்கு ஒதுக்கப்பட்ட நிதியில் முதல் காலாண்டுக்கான வேலைத்திட்டமாக ஹப்புகஸ்தென்ன தோட்டத்தின் பாலர் பாடசாலை மண்டபம் தற்போது பிரஜாசாலை மண்டபமாக மாற்றியமைப்பதற்கான மேற்பார்வை மற்றும் ஆரம்பக்கட்ட நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

மஸ்கெலியா பிரதேச சபை உறுப்பினர் ஆனந்தன், மவுசாகலை வட்டார இளைஞரணித் தலைவர் ரொமேஸ் தர்மசீலன் ஆகியோர் களத்திற்கு சென்று பார்வையிட்டதோடு மஸ்கெலியா பிரதேச சபையின் தொழில்நுட்பப் பிரிவு அதிகாரிகளும் வருகைதந்து சம்பந்தப் பட்ட வேலைத்திட்டத்திற்கான திட்டமிடல்களை நெறிப்படுத்தினர்.

குறித்த வேலைத்திட்டங்களை விரைவில் செய்துமுடிக்க முழுமையாக உதவி செய்வ தாகவும் உறுதியளித்தனர்.

தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கை சிறப்பாக முன்னெடுக்கப்படுகிறது

சுகாதார அமைச்சு சுட்டிக்காட்டு

நாட்டில் கொரோனா தொற்றுப் பரவலை தடுக்கும் நோக்கில் தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கைகள் சிறப்பாக முன்னெடுக்கப் படுவதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதனடிப்படையில் ஒரு கோடியே 68 இலட்சத்து 84 ஆயிரத்து 30 பேருக்கு இதுவரை தடுப்பூசியின் முதல் டோஸ் வழங்கப்பட்டுள்ளது. ஒரு கோடியே 41 இலட்சத்து 47 ஆயிரத்து 202 பேருக்கு இரண்டாவது டோஸ் வழங்கப்பட்டுள்ளது.

மேலும், 69 இலட்சத்து 52 ஆயிரத்து 621 பேருக்கு பூஸ்டர் தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதேவேளை, பல்வேறு நபர்கள் சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றினாலும் ஒருசில தரப்பினர் அவற்றை மீறி செயற்படுவதாக சுகாதார அமைச்சின் பிரதி சுகாதாரப் பணிப்பாளர் நாயகம் விசேட வைத்திய நிபுணர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார். இதனூடாக மேலும் பல கொரோனா கொத்தணிகள் உருவாவதற்கான வாய்ப்புகள் காணப்படுவதாகவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கொட்டகலை ஸ்ரீ முத்துமாரிம்மன் ஆலய சிவராத்திரி பூஜைகள் செவ்வாயன்று

கொட்டகலை, ஓட்டன் ஹில்ஸ் ஸ்ரீ முத்துமாரிம்மன் தேவஸ்தானத்தின் மகா சிவராத்திரி விசேட பூஜை வழிபாடுகள் எதிர்வரும் செவ்வாய்க்கிழமை (01) இடம்பெறவுள்ளது.

அதற்கமைய, அன்றைய தினம் நான்கு கால பூஜைகள் இடம்பெறவுள்ளன. இந்த பூஜைகளுக்கு உபயம் எடுக்க விரும்பும் அடியார்கள் தேவஸ்தான காரியாலயத்தை தொடர்புகொள்ளுமாறு ஆலய நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது. அடியார்கள், அபிஷேக பொருட்களை எடுத்துவர முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

இனங்களை பிரிக்கும் செயற்பாட்டை நிறுத்தக்கோரி ராகலை சூரியகாந்தி தோட்ட மக்கள் ஆர்ப்பாட்டம்

(செ.திவாகரன்)

ராகலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட சூரியகாந்தி தோட்டத்தில் 2010ஆம் ஆண்டு காலப்பகுதியில் தோட்ட மக்களுக்கான கலாசார மண்டபம் வழங்கப்பட்டுள்ளது. எனினும், பல்வேறு சர்ச்சைகள் எழுப்பிய நிலையில் இது தொடர்பாக தோட்ட மக்கள் கடந்த காலங்களில் இரண்டுதரும் மேற்பட்ட போராட்டங்களில் ஈடுபட்டு வந்திருந்தனர்.

இந்நிலையில் நேற்று (25) மீண்டுமொரு போராட்டத்தை முன்னெடுத்தனர். இப்போராட்டத்தில் 100இற்கும் மேற்பட்ட தோட்ட தொழிலாளர் மற்றும் பொதுமக்கள் இணைந்துகொண்டனர்.

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஜே.ஸ்ரீரங்காவின் நிதியில் கட்டப்பட்ட இம்மண்டபம் தமக்கு உரியது. இனங்களை பிரிக்கும் செயற்பாட்டை நிறுத்து, சமூகத்தி உத்தியோகத்தரை உடனே மாற்று, பாரபட்சமான செயற்பாடு வேண்டாம் என எதிர்ப் வசனங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவண்ணம் கோரிக்கைகள் அடங்கிய கோஷங்களை எழுப்பி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஸ்ரீரங்கா மண்டபம் எங்களுக்கு வேண்டும். வேறு யாருக்கும் வழங்க முடியாது என கோரிக்கை விடுத்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இம் மண்டபத்தை வேறுசிலர் அபகரிக்க முயற்சிக்கின்றமையும் குறிப்பிடத்தக்கது. இப்போராட்டம் காரணமாக ராகலை சூரியகாந்தி தோட்டத் தொழிளாளர் தொழிலுக்கு செல்லவில்லை .

கிளிநொச்சி விபத்தில் குடும்பஸ்தர் படுகாயம்

கிளிநொச்சி - பளை ஏ-9 வீதியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் படுகாயமடைந்த நிலையில் பளை வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

குறித்த விபத்து நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.

முல்லையடி பகுதியில் மோட்டார் சைக்கிளில் பயணித்த ஒருவர், வீதியில் மாடு குறுக்கே சென்றதால் மாட்டுடன் மோதி விபத்திற்குள்ளாகினார்.

இந்த விபத்தின் போது மோட்டார்சைக்கிளில் பயணித்த குடும்பஸ்தர் படுகாயமடைந்த நிலையில், வைத்தியசாலையில் சேர்க்கப் பட்டுள்ளார்.

இந்திய சுற்றுலாப் பிரதிநிதிகள் மாநாட்டை ஏப்ரல் மாதம் கொழும்பில் நடத்த ஏற்பாடு

இந்திய சுற்றுலாப் பிரதிநிதிகள் சங்கத்தின் இந்த ஆண்டுக்கான மாநாடு எதிர்வரும் ஏப்ரல் மாதம் 19ஆம் திகதிமுதல் கொழும்பில் நடைபெறவுள்ளது.

இந்த மாநாடு இலங்கை சுற்றுலாத்துறையின் மேம்பாட்டுக்கு மிகவும் முக்கியமானதென இலங்கை துறைமுக அதிகார சபை தெரிவித்துள்ளது. இந்த மாநாட்டில் 500இற்கும் மேற்பட்ட இந்தியப் பிரதிநிதிகள் கலந்துகொள்ளவுள்ளனர்.

இது தொடர்பில் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் இந்தியப் பிரதிநிதிகளுக்கும் இடையில் உடன்படிக்கையொன்றும் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

உடன்படிக்கை கைச்சாத்திடும் நிகழ்வு கொழும்பில் இடம்பெற்றது. கொரோனா தொற்று காரணமாக சுற்றுலாத்துறைக்கு பல்வேறு பாதிப்புகள் ஏற்பட்டாலும் குறித்த துறையை பல்வேறு கட்டங்களில் மேம்படுத்துவதற்கு தம்மால் முடிந்ததாக சுற்றுலாத்துறை அமைச்சர் பிரசன்ன ரணதுங்க இதன்போது தெரிவித்தார்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் ஒரு இலட்சத்து 50 ஆயிரத்திற்கும் மேற்பட்ட சுற்றுலாப் பயணிகள் வருகை தந்துள்ளதாகவும் அடுத்தவருடம் சுற்றுலாப் பயணிகளின் எண்ணிக்கை 2.8 மில்லியனாக அதிகரிக்குமென எதிர்பார்ப்பதாகவும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க குறிப்பிட்டார்.

பிரதமரின் தலைமையில் 07 திரிபிடக நூல்கள் வெளியீடு



பௌத்த விவகார திணைக்களத்தின் வழிகாட்டுதலின்கீழ் திரிபிடக நூல் திருத்தக்குழுவினால் மொழிபெயர்க்கப்பட்ட 07 திரிபிடக நூல்கள் புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சரும் பிரதமருமான மஹிந்த ராஜபக்ஷவின் தலைமையில் நேற்று முன்தினம் (24) அலரிமாளிகையில் வைத்து வெளியிட்டு வைக்கப்பட்டது. திரிபிடக நூல் திருத்தக் குழுவின் உறுப்பினர் ராஜகீய பண்டித – அக்கமஹா பண்டித, இலங்மை அமரபுர ஸ்ரீதர்மரக்ஷித மகாநிகாயவின் மகாநாயக்கர் வணக்கத்துக்குரிய திருகோணமலை ஆனந்த தேரர் உள்ளிட்ட வருகைதந்திருந்த மகாநாயக்கர்களுக்கு இந்நூல் வழங்கப்பட்டது.

லீசிங் பணம் செலுத்துவதற்காக வயோதிபப் பெண்ணை கோடரியால் அடித்துக் கொன்றேன்

கைதாகிய இளம் குடும்பஸ்தர் வாக்குமூலம்

(யாழ். நிருபர்)

"மோட்டார்சைக்கிள் லீசிங் பணம் கட்டுவதற்கு பணம் தேவைப்பட்டதால் வயோதிபப் பெண்ணைக் கொலை செய்துவிட்டு அவர் அணிந்திருந்த தங்கச்சங்கிலியை அபகரித்துச் சென்றேன்" - இவ்வாறு யாழ்ப்பாணம் மாநகரில் தனிமையிலிருந்த வயோதிபப் பெண் கொலை தொடர்பில் கைதுசெய்யப்பட்ட இளம் குடும்பஸ்தர் வாக்குமூலம் வழங்கியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை (22) யாழ்ப்பாணம் இராசாவின் ஒழுங்கையிலுள்ள வீடொன்றில் தனிமையில் வசித்த வயோதிபப் பெண் அடித்துக்கொலை செய்யப்பட்டார்.

மரியநாயகம் காணிக்கையம்மா ஜெயசீலி (வயது – 72) என்ற வயோதிபப் பெண்ணே கொலை செய்யப்பட்டார்.

சம்பவம் தொடர்பில் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலைய குற்றத்தடுப்புப் பிரிவு பொறுப்பதிகாரி தலைமை பொலிஸ் பரிசோதகர் டிஸ்ரொக் தலைமையிலான பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

சம்பவ தினத்தன்று அருகிலுள்ள சி.சி.ரி.வி. கெமரா பதிவில் கொலையாளி சைக்கிளில் பயணித்துள்ளார். அதனடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டன.

பொலிஸாரினால் அடையாளம் காணப்பட்டவர் நேற்று முன்தினம் இராசாவின் தோட்டம் பகுதியில் கொலைச் சந்தேக நபர் சைக்கிளில் பயணித்தபோது பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் அடிப்படையில் கைதுசெய்யப்பட்டார்.

புன்னாலைக்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த 28 வயதுடைய இளம் குடும்பஸ்தரே இவ்வாறு கைதுசெய்யப்பட்டார்.

சந்தேக நபர் வழங்கிய வாக்குமூலத்தில்,

"வயோதிபப் பெண்ணின் வீட்டில் முதல் நாள் பூக்கன்றுகளை வெட்டி வேலை செய்தேன். மறுநாள் மிகுதி வேலையை செய்யுமாறு கேட்டிருந்தார்.

மறுநாள் சென்றபோது பட்டமரத்தை வெட்டுமாறு அயலிலுள்ள வீட்டில் கோடரி, மண்வெட்டியை வயோதிபப் பெண் வாங்கித்தந்தார்.

எனது மனைவிக்கு மோட்டார்சைக்கிள் லீசிங்கில் வாங்கிக் கொடுத்தேன். அதற்கான பணத்தை உறவினரிடம் வாங்கிக் கட்டியிருந்தேன். அவர் தன்னிடம் வாங்கிய 20 ஆயிரம் ரூபா பணத்தை மீளத் தருமாறு அடிக்கடி கேட்டார்.

அதனால் கோடரியை எடுத்துக்கொண்டு தொலைக்காட்சி பார்த்துக்கொண்டிருந்த வயோதிபப் பெண்ணின் பின்னால் சென்று தலையில் தாக்கினேன். அவர் சுயநினைவற்றிருந்தார். அவரது சங்கிலியை அபகரித்துக்கொண்டு சென்றுவிட்டேன்" என்று தெரிவித்தார்.

அத்துடன் தனது வீட்டுக்கு பொலிஸாரை அழைத்துச் சென்ற சந்தேக நபர் பை ஒன்றிலிருந்த தங்கச் சங்கிலியை எடுத்து பொலிஸாரிடம் ஒப்படைத்தார். சந்தேக நபரை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த பொலிஸார் நடவடிக்கை மேற்கொண்டனர்.

வடமாகாண ஆளுநரின் நெறிப்படுத்தலில் வவுனியாவில் இடம்பெற்ற நடமாடும் சேவை

(வவுனியா செய்தியாளர்)

வட மாகாண ஆளுநரின் திட்டமிடலுக்கமைய, வடமாகாண நடமாடும் சேவை ஒன்று வவுனியா பிரதேச செயலகப் பிரிவுக்குட்பட்ட மக்களுக்காக இடம்பெற்றது.

வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் குறித்த நடமாடும் சேவை நேற்று முன்தினம் (24) இடம்பெற்றது.

இதில் வடமாகாணத்துக்குட்பட்ட காணித் திணைக்களம், போக்குவரத்து திணைக்களம், விவசாய அமைச்சு, கல்வி அமைச்சு, ஆட்பதிவு திணைக்களம், விவசாய அமைச்சு, சுகாதாரத் திணைக்களம், உள்ளூராட்சி அமைச்சு, நீர்ப்பாசனத் திணைக்களம், ஆட்பதிவு திணைக்களம், பிறப்பு - இறப்பு - விவாகப் பதிவு திணைக்களம், கால்நடை உற்பத்தி, மாகாண பொதுச் சேவை ஆணைக்குழு உள்ளிட்ட பல திணைக்களங்களும் அமைச்சுகளும் இந்த நடமாடும் சேவையில் பங்கேற்றன.வடமாகாண ஆளுநர் ஜீவன் தியாகராஜாவின் வழிப்படுத்தலில் நடைபெற்ற இந்த நடமாடும் சேவையில் வவுனியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்கள் பலரும் கலந்து கொண்டு நீண்டகாலமாக தீர்க்கப்படாதிருந்த பல பிரச்சினைகளுக்கான தீர்வுகளைப் பெற்றுக் கொண்டனர்.

இதில் வடமாகாண அமைச்சுகளின் உயர் அதிகாரிகள், திணைக்கள தலைவர்கள், அரச அதிகாரிகள், பொது மக்கள் எனப்பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ். இந்துக் கல்லூரியில் சாரணர்கள் பழமரக்கன்றுகள் நடல்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியில் இம்முறை ஜனாதிபதி சாரணர் விருது பெற்றுக்கொண்ட மாணவர்கள் சாரணர் ஸ்தாபகர் பேடன் பவல் பிரபுவின் பிறந்த தினத்தினை நினைவுகூர்ந்தும் ஆர்.நிமல், ரி.சிவசங்கர், பி.கோபிராம், எஸ்.டினுசாந்தன், எஸ்.பிரணவன் ஆகியோர் ஜனாதிபதி விருது பெற்றுக்கொண்ட ஞாபகார்த்தமாகவும் "நினைவுகள் இனித்திட வேண்டும்" என்ற தொனிப்பொருளில் கல்லூரியில் கல்லூரி முதல்வர் ஆர்.செந்தில் மாறனின் வழிகாட்டலில் குறித்த காலப்பகுதி குழு சாரணியப் பொறுப்பாசிரியர் க.சுவாமிநாதன், சாரணப் பொறுப்பாசிரியர் சி. ஜீவகநாதன் ஆகியோரது பங்கேற்புடன் பழமரக்கன்றுகள் நாட்டப்பட்டன.

சுயதொழில் பயிற்சியை நிறைவுசெய்தவர்களுக்கு நெசவு கைத்தறி உபகரணங்கள் வழங்கிவைப்பு

(எம்.எம்.ஜெஸ்மின்)

இரும்புகள், பித்தளை, மட்பாண்டங்கள், மரப்பொருட்கள் மற்றும் கிராமிய கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சு, அத்துடன் தேசிய அருங்கலைகள் பேரவை இணைந்து மன்னார் மாவட்டத்தில் முதற்றடவையாக கைப்பணி சம்பந்தமான சுயதொழிலுக்கான பயிற்சியினை நிறைவுசெய்த மன்னார் தாராபுரம் கைப்பணி கிராமத்துக்குட்பட்ட 10 பயனாளிகளுக்கான நெசவு கைத்தறி உபகரணங்கள் வழங்கி வைக்கும் நிகழ்வு அண்மையில் மன்னார் நகர பிரதேச செயலகத்தில் இடம்பெற்றது.

வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும் மன்னார், முல்லைத்தீவு மாவட்ட அபிவிருத்தி குழுத் தலைவருமான காதர் மஸ்தான் பிரதம அதிதியாக கலந்துகொண்டு பயனாளிகளுக்கு நெசவு கைத்தறி உபகரணங்களை கையளித்தார். இந்நிகழ்வில் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் மற்றும் பயனாளிகள் கலந்துகொண்டனர்.

உயிரிழந்த தாயாரின் சடலத்துடன் 14 நாட்கள் உடனிருந்த மகள்

இயற்கை மரணமா, தற்கொலையா? என மிரிஹானை பொலிஸார் தீவிர விசாரணை

உயிரிழந்த தாயாரின் சடலத்துடன் 14 நாட்கள் வீட்டில் தங்கியிருந்த மகள் தொடர்பில் மிரிஹானை பொலிஸார் தீவிர விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இவ்வாறு உயிரிழந்த பெண்ணின் மகள் உளரீதியாக பாதிக்கப்பட்டுள்ளதாக ஆரம்பகட்ட விசாரணைகளிலிருந்து தெரிய வந்துள்ளது.

இச்சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது,

நுகேகொடை, தெல்கந்த பெங்கிரிவத்தவில் உள்ள வீடொன்றில் துர்நாற்றம் வீசுவதாக பொலிஸாருக்கு கடந்த புதன்கிழமை (23) அப்பகுதி மக்களால் தகவல் வழங்கப்பட்டுள்ளது. அதற்கமைய பொலிஸார் அந்த வீட்டுக்குச் சென்ற சமயம் பெண்ணொருவரின் சடலம் அழுகிய நிலையில் காணப்பட்டுள்ளதுடன் அதற்கு அருகில் 45 வயது மதிக்கத்தக்க பெண்ணொருவரும் காணப்பட்டுள்ளார்.

அவர் உயிரிழந்த பெண்ணின் மகள் என தன்னை அறிமுகப்படுத்திக்கொண்டுள்ளார்.

அங்கிருந்த பெண்ணின் சடலம் அதிக துர்நாற்றம் வீசியதையடுத்து அதனை அங்கிருந்து அகற்றுவதற்கு பொலிஸார் உடனடியாக நடவடிக்கை எடுத்தனர்.

அந்தப் பெண்ணின் கணவர் பலநாட்களுக்கு முன்னர் உயிரிழந்துள்ளதாகவும் தாயும் மகளும் மாத்திரமே வீட்டில் வசித்துவந்ததாகவும் அயலவர்கள் தெரிவித்தனர்.

சுமார் 14 நாட்கள் தாயாரின் சடலத்துடன் அந்த வீட்டில் மகள் வசித்து வந்ததாக தெரிய வந்துள்ளது.

மகளுக்கு உளநல பாதிப்பு காரணமாக தாய் இறந்த விடயத்தை மகள் அயலவர்களுக்கு அறிவிக்கவில்லையெனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்தவரின் சடலம் களுபோவில வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது. இந்தப் பெண் கொலைசெய்யப்பட்டாரா அல்லது இயற்கை மரணம் எய்தினாரா? என்பது தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

மன்னார் மெசிடோ நிறுவனத்தால் முகக்கவசம் – கிருமி தொற்றுநீக்கி அரச அதிபரிடம் கையளிப்பு

(மன்னார் நகர் நிருபர்)

மன்னாரில் கொரோனா தொற்று அதிகரித்து வருகின்ற நிலையில் தற்போது ஒமிக்ரொன் திரிபினால் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில் கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொள்ளும் மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தும் அரச உத்தியோகத்தர்களின் பயன்பாட்டுக்காக ஒரு தொகுதி முகக்கவசம் மற்றும் கிருமி தொற்றுநீக்கி என்பன நேற்று முன்தினம் வியாழக்கிழமை (24) மாலை மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தினால் (மெசிடோ) மன்னார் மாவட்ட செயலகத்தில் கையளிக்கப்பட்டுள்ளது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டி மெலின் கோரிக்கைக்கமைவாக மன்னார் சமூக பொருளாதார மேம்பாட்டுக்கான நிறுவனத்தின் பணியாளர்கள் மாவட்ட செயலகத்தில் வைத்து மன்னார் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் எஸ். குணபாலனிடம் கையளித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

மன்னாரில் பெற்றோல் தட்டுப்பாட்டால் பொதுமக்கள் அவதி

(மன்னார் நகர் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் நேற்று முன்தினம் மாலை முதல் எரிபொருள் நிலையங்களில் பெற்றோல் இன்மையால் பொதுமக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

எரிபொருள் நிரப்பு நிலையங்களில் எரிபொருள் இன்மையால் வாகன உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் திருப்பி அனுப்பப்படுகின்றனர்.

அதேநேரம் போக்குவரத்து சேவைகளும் முடக்கமடைந்துள்ளன.

அரச அலுவலகங்களில் கடமையாற்றும் அதிகாரிளும் பெற்றோல் இன்மையால் பாரிய சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர்.

திகதி 24.02.2022 வியாழக்கிழமை உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் : 4688
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 11,516,930.00
ஆங்கில எழுத்து Y
வெற்றி இலக்கங்கள் 3 2 0 5 7 9
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 47,464,903.00

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் : 2983
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,082,000.00
ஆங்கில எழுத்து O
வெற்றி இலக்கங்கள் 32 38 56 75
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 67,874,930.40

Mega POWER 23+
சீட்டிழுப்பு இலக்கம் 1036
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 4,900,860.00
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 237,731,314.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து J
வெற்றி இலக்கங்கள் 19 08 11 12 78

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் : 718
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,712,500.00
ஆங்கில எழுத்து A
வெற்றி இலக்கங்கள் 11 18 53 65
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 99,073,293.20

NLB ஹந்தஹன ராசி சுப பலன்
சீட்டிழுப்பு இலக்கம் : 0029
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 5,208,280.00
இலக்கினம் ரிஷபம்
வெற்றி இலக்கங்கள் 21 24 40 58
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,614,564.76

செவன
சீட்டிழுப்பு இலக்கம் : 359
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை
ரூ. 2,094,020.00
ஆங்கில எழுத்து K
வெற்றி இலக்கங்கள் 06 08 77 97
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 14,429,752.00

ஸ்ரீலங்கா தேசிய லொத்தர் சபை National Lotteries Board
நுகர்வர் ஆலோசனை மாவட்டம் முதலிடம் பாகம்
தொலைபேசி: 0114 607 000, 0112 324 324
பெக்ஸ்: 0114 669 416

அம்பாறை மாவட்ட மஜீட்புரத்தில் திடீரென ஊருக்குள் நுழைந்த யானைக்கூட்டத்தால் பிரதேசவாசிகள் அச்சம்

வனஜீவராசிகள் திணைக்களம் கவனிப்பதில்லையென பொதுமக்கள் குற்றச்சாட்டு

(பாறுக் ஷிஹான்)

அம்பாறை மாவட்டத்தில் நேற்று முன்தினம் (24) மாலை திடீரென சம்மாந்துறை ஊடாக மஜீட்புரம் பகுதிகளை ஊடறுத்து ஊருக்குள் பிரவேசிக்க முயன்ற சுமார் 100இற்கும் அதிகளவான யானைகளை கட்டுப்படுத்தி அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்காக துரித நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது.

மாலைமுதல் இரவுவரை குறித்த யானைகள் நகர்ந்து செல்லாமல் ஓர் இடத்தில் கூடி நிற்கின்றமை மற்றும் கலவரப்பட்டமை தொடர்பில் வனவிலங்கு அதிகாரிகளுக்கு பொதுமக்களால் தகவல் தெரிவிக்கப்பட்டது.

இதன்போது குறித்த யானைகளை அவ்விடத்திலிருந்து அகற்றுவதற்காக வனவிலங்கு அதிகாரிகள் நடவடிக்கைகளை மேற்கொள்வதற்காக யானைக்கூட்டத்தின் நகர்வுகளை அவதானித்து நடவடிக்கை எடுத்திருந்ததார். இதனால் சம்மாந்துறை வளத்தாபிட்டி பகுதிகளில் பொதுமக்கள் குவிந்து நின்று யானைக்கூட்டத்தை அவதானிப்பதை காணமுடிகிறது. யானைக் கூட்டத்தினை பார்வையிடவரும் மக்களால் போக்குவரத்து நெரிசல் தொடர்ச்சியாக இடம்பெற்று வருவதை அவதானிக்க முடிகின்றது.

இதுதவிர, குறித்த நிலைமைகளை ஆராய்ந்து வனஜீவராசிகள் பாதுகாப்பு, யானைவேலிகள் மற்றும் அகழிகளை அமைத்தல் உள்ளிட்ட பாதுகாப்பு வேலைத்திட்டங்கள், காடுகளை மீண்டும் வளர்த்தல் மற்றும் வனவளங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் விமலவீர திசாநாயக்கவும் உடனடியாக நடவடிக்கையை மேற்கொண்டிருந்தார்.

மேலும் இப்பிரதேசத்தில் அண்மையில் வேளாண்மை அறுவடை மேற்கொள்ளப்பட்ட நிலையில் தீ வைக்கப்படுவதனாலும் அங்கு கொட்டப்படும் குப்பைகளை தினந்தோறும் 100இற்கும் மேற்பட்ட யானைகள் உண்பதற்கு வருகைதருவதுடன், அருகிலுள்ள பொதுமக்களின் உடைமைகளுக்கும் சேதம் விளைவிக்கின்றமை குறிப்பிடத்தக்கது.

மேலும் அண்மைக்காலமாக தினந்தோறும் இது இடம்பெறுவதனால் யானைக்கூட்டத்தை கட்டுப்படுத்தி காட்டிற்கு விரட்டுவதற்கு அவ்விடத்திற்கு வனஜீவராசிகள் திணைக்களம் வருகை தருவதில்லை என்கின்ற குற்றச்சாட்டு பொதுமக்கள் மத்தியில் உள்ளமை சுட்டிக்காட்டத்தக்கது.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மாகாண காரியாலயம் மட்டக்களப்பில் ஆரம்பிக்கப்படவேண்டும்

நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் கோரிக்கை

(வெல்லாவெளி நிருபர்)

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் மாகாண காரியாலயம் மட்டக்களப்பு மாவட்டத்தில் ஆரம்பிக்கப்படவேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினரும், மாவட்ட அபிவிருத்திக் குழுவின் இணைத்தலைவருமான சிவநேசதுரை சந்திரகாந்தன் கோரிக்கை முன்வைத்தார்.

வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தலைமைக் காரியாலயத்தில் நேற்று முன்தினம் (24) இடம்பெற்ற விசேட கலந்துரையாடலின்போது வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் தவிசாளர் மேஜர் ஜெனரல் டொக்டர் மஹிந்த ஹத்துருசிங்கேவிடம் இக்கோரிக்கையினை நாடாளுமன்ற உறுப்பினர் சிவநேசதுரை சந்திரகாந்தன் முன்வைத்துள்ளார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், கிழக்கு மாகாணத்திலிருந்து தொழில் நிமித்தம் வெளிநாட்டிற்கு செல்லும் இளைஞர்கள், யுவதிகள் பல சமயங்களில் வன்முறைச் சம்பவங்களுக்கு உள்ளாக்கப்படுதல் மற்றும் தாய்நாட்டிற்கு திரும்புவதிலுள்ள பிரச்சினைகள், வெளிநாடுகளில் வைத்து கையளிக்கப்படுதல், பேசப்பட்ட ஊதியம் வழங்கப்படாமை, நோய்வாய்ப்படுகின்றபோது உரிய சிகிச்சைகளை பெற்றுக்கொள்வதில் தாமதங்கள் ஏற்படுதல் போன்ற பல பிரச்சினைகள் தொடர்பில் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தினை எமது மாகாண மக்கள் இலகுவாக அணுகி சேவைகளை பெற்றுக்கொள்ளும் முகமாகவே இக்கோரிக்கை முன்வைக்கப்பட்டுள்ளதாக தெரிவித்தார்.

வாகரையில் தீயில் எரிந்த நிலையில் பெண்ணொருவர் சடலமாக மீட்பு

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாகரையில் வீடொன்றில் 64 வயதுடைய பெண் ஒருவர் தீயில் எரிந்து உயிரிழந்த நிலையில் நேற்று (25) சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக வாகரை பொலிஸார் தெரிவித்தனர்.

நாகபுரம் பால்சேனையைச் சேர்ந்த 64 வயதுடைய பூமணலதேவி என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் சம்பவதினமான நேற்று முன்தினம் இரவு குப்பிவிளக்கு ஒன்றை எரியவைத்துவிட்டு அதற்கு அருகில் ஆழ்ந்த நித்திரையின்போது குப்பிவிளக்கு அவர் மீது வீழ்ந்ததன் காரணமாக அவர் தீப்பற்றி எரிந்துள்ள நிலையில், நேற்று காலையில் சடலமாக மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணையில் தெரியவந்துள்ளது.

குறித்த சடலத்தை பிரேத பரிசோதனைக்கு வைத்தியசாலைக்கு ஒப்படைப்பதற்காக நீதிமன்ற அனுமதியை பெறும் நடவடிக்கையை மேற்கொண்டுவருவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேதிக விசாரணைகளை வாகரை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

காணாமல்போன ஏறாவூர் மாணவன் கண்டுபிடிப்பு

(மீராவோடை நிருபர்)

தேடப்பட்டுவந்த தனது மகனை கண்டுபிடித்த துள்ளதாக காணாமல்போன நிலையில் கண்டுபிடிக்கப்பட்ட மாணவனின் தந்தை தெரிவித்தார்.

மட்டக்களப்பு - ஏறாவூர் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட றகுமானியா வீதியில் வசித்துவந்த, ஏறாவூர் அலிகார் தேசிய பாடசாலையில் உயர்தரத்தில் கல்வி கற்றுவரும் எம்.ஏ.எம்.அஸ்பக் எனும் மாணவன் கடந்த 22ஆம் திகதி காணாமல்போயிருந்தார்.

இவ்வாறு காணாமல்போன மாணவனை ஏறாவூர் பொலிஸாரின் உதவியுடன் கண்டுபிடிக்க குடும்பத்தார் பல்வேறு முயற்சிகளை மேற்கொண்டு வந்தனர்.

இந்நிலையில், தேடப்பட்டுவந்த மாணவனை 3 நாட்களின் பின்னர் நேற்று முன்தினம் (24) மாலை கொழும்பு பகுதியில் வைத்து கண்டுபிடித்துள்ளதாக மாணவனின் தந்தை தெரிவித்தார்.

மாணவன் சுயமாக தனது வீட்டை விட்டு சென்றுள்ளதாக விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

பொத்துவில், அறுகம்பே பகுதியிலுள்ள முச்சக்கரவண்டி சாரதிகளுக்கு செயலமர்வு

(நிந்தவூர் நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் பொத்துவில், அறுகம்பே பிரதேசத்தில் சுற்றுலாத்துறையிலுள்ள வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு உல்லாசப் பயணிகளுக்கு பயண சேவையை வழங்கும் வாகன சாரதிகளுக்கான ஒருநாள் செயலமர்வு பொத்துவில், அறுகம்பே பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்றது.

ஸ்ரீலங்கா சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையும் தொழிற்பயிற்சி அதிகாரசபையும் இணைந்து ஒழுங்குசெய்யப்பட்டிருந்த மேற்படி செயலமர்வு சுற்றுலா சம்மேளனத்தின் தலைவர் ஏ.எம்.ஜவ்பர் தலைமையில் இடம்பெற்றது.

ஏற்கனவே தொழிற்பயிற்சி அதிகாரசபையினால் பயிற்சி வழங்கப்பட்ட மேற்படி சாரதிகளுக்கு அடையாள அட்டைகளை மிக விரைவாக பெற்றுக்கொள்ளும் வகையில் இந்தச் செயலமர்வு ஒழுங்குசெய்யப்பட்டிருந்தது.

நிகழ்வின் இறுதியில் சாரதிகளுக்கு அதிதிகளினால் சான்றிதழ்கள் வழங்கப்பட்டன.

தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் வருடாந்த பொதுக்கூட்டமும் நிர்வாக சபை தெரிவும்

(ஒலுவில் நிருபர்)

தென்கிழக்குப் பல்கலைக்கழக ஊழியர் சங்கத்தின் 22ஆவது வருடாந்த பொதுக்கூட்டமும் புதிய நிர்வாக சபைத் தெரிவும் நேற்று முன்தினம் (24) பல்கலைக்கழக ஏ.ஆர்.மன்சூர் ஞாபகார்த்த பிரதான மாநாட்டு மண்டபத்தில் தலைவர் எம்.எம்.நௌபர் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாக உபவேந்தர் பேராசிரியர் ஏ.றமீஸ், கௌரவ அதிதியாக பதிவாளர் எச்.அப்துல் சத்தார், விசேட அதிதியாக பதில் நிதியாளர் சி.எம்.வன்னியாராச்சி ஆகியோர்கள் கலந்துகொண்டனர்.

இந்நிகழ்வில் 25 வருடங்களைக் கடந்த பல்கலைக்கழக ஊழியர்கள் பலர் நினைவுச் சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டனர். அத்துடன், பல்கலைக்கழக சேவையில் அதிகுறைந்த விடுமுறைகளைக்கொண்ட ஊழியரான ஜ.எல்.எம்.நிலாம்டீன் கௌரவிக்கப்பட்டது விசேட அம்சமாகும்.

இதன்போது ஊழியர் சங்கத்தின் புதிய தலைவராக மீண்டும் எம்.எம்.றௌபர், உபதலைவர் கே.எல்.இப்றாஹிம், செயலாளர் எம்.ரி.ஹாசீர் முகம்மட், உபசெயலாளர் ஏ.எம்.றஸ்மி, உபசெயலாளர் (பிரயோக விஞ்ஞான பீடம்) ஏ.எம். றம்ஸான், பொருளாளர் எம்.ஜி.ரொஸான், றவன்புரி இணைச் செயலாளர் (ஆண்) எம்.எம்.எம்.காமீல், றவன்புரி இணைச் செயலாளர் (பெண்) ஏ.ஆர்.ஜிப்ரியா றௌபர், உள்ளக கணக்குப் பரிசோதகர் எம்.எல்.றிஸாஸ் உள்ளடங்கலாக பல்கலைக்கழகத்திலுள்ள அனைத்து தினைக்களங்களுக்கான பிரதிநிதிகளும் தெரிவு செய்யப்பட்டனர்.

அதாவது, எம்.சி.ஏ.கபூர், எம்.ரி.எம்.தாஜுதீன், ஏ.எல்.சுதக்கலுல்லாஹ், ஏ.சி.றியாஸ், வை.முபாறக், எம்.எம்.எம்.ஜெஸீம், ஏ.எல்.எம்.பைறோஸ், ஹபீல், எஸ்.றிபாய்தீன், இஸட்.ஏ.ஸாபீர், றஸாக் முகம்மட் அலி, றிஸ்வான். ஜ.எல்.எம்.அனஸ், எம்.எம்.எம்.றம்ஸீன், ஏ.எம்.ஏ.றவாஸ், எம்.ஐ.தாஹீர், வை.ஹஸ்ஸேந்திரா, ஏ.ஆர்.ஸுமர்தீன் ஆகியோர்களும் கலந்துகொண்டனர்.

பெற்றோரின் அலட்சியப்போக்கே சிறுவர் துஷ்பிரயோகங்களுக்கு வழிவகுக்கின்றன

சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினர் மாஹிர் தெரிவிப்பு

(நிந்தவூர் நிருபர்)

பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் பாதுகாப்பு தொடர்பில் அலட்சியப் போக்குடன் செயற்படுவதனாலேயே அதிகளவில் சிறுவர் துஷ்பிரயோக செயற்பாடுகள் இடம்பெறுகின்றன.

இவ்வாறு சம்மாந்துறை நெய்னாகாடு பகுதியில் இடம்பெற்ற பெண்களுக்கான விழிப்புணர்வு கருத்தரங்கில் கலந்துகொண்ட முன்னாள் கிழக்கு மாகாண சபை உறுப்பினரும், சம்மாந்துறை பிரதேச சபை உறுப்பினருமான ஜ.எல்.எம்.மாஹிர் தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில், நகரப்புறங்களைவிட கிராமப்புறப் பகுதிகளில் அதிகளவான சிறுவர்கள் தாய், தந்தையரின் பராமரிப்பின்றியும் பாதுகாப்பின்றியும் இருக்கின்றனர்.

இதற்குப் பிரதான காரணம் கிராமப்புற மக்கள் அன்றாடம் தொழில் செய்து தமது ஜீவனோபாயத்தை முன்னெடுத்து செல்வதால்தான் அவர்களால் தமது பிள்ளைகளை கவனிக்கமுடியாத சூழ்நிலை ஏற்படுகின்றது.

எனவே, பெற்றோர்கள் தமது பிள்ளைகளின் பாதுகாப்பு விடயத்தில் அதிக கவனமெடுத்து செயற்படவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

மட்டக்களப்பில் குளங்களுக்கு அழகு சேர்க்கும் பூக்கள்

(மட்டக்களப்பு நிருபர்)

வடகீழ் பருவப்பெயர்ச்சி மழை தற்போது ஓய்ந்துள்ள நிலையில், அவ்வப்போது ஓரளவு மழை பெய்து வருகின்றபோதிலும், மாவட்டத்திலுள்ள பெரும்பாலான சிறு குளங்களில் நீர் நிரம்பியுள்ளதை அவதானிக்க முடிகின்றது.

இந்நிலையில், நீர் நிரம்பிக் காணப்படும் குளங்களுக்கு அழகு சேர்க்கும் வண்ணம் வெண்டாமரை, அல்லி மற்றும் வெங்காயத்தாரை போன்றன பூத்துக்குலுங்குவதையும், அதனை அப்பகுதியில் பயணம் செய்யும் மக்கள் பார்த்து இரசித்து வருவதையும் அவதானிக்க முடிகின்றது.

மட்டக்களப்பு மாவட்டத்தின் படுவான்கரைப் பகுதியில் அமைந்துள்ள பெரியபோரதீவு பெரியகுளம், கோவில்போரதீவுக்குளம், பொறுகாமம் குளம், வெல்லாவெளிக்குளம், பழுகாமத்துக்குளம் உள்ளிட்ட பல பகுதிகளிலும் அமைந்துள்ள சிறு குளங்களில் இக்காட்சியை அவதானிக்க முடிகின்றது.

இது படுவான்கரைப் பகுதிக்கு மேலும் அழகு சேர்ப்பதாக அப்பகுதிவாழ் மக்கள் தெரிவிக்கின்றனர்.

ஜனநாயகம் தோற்று இனவாதம் வென்றுள்ளது

முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீநேசன்

(வீரமுனை நிருபர்)

ஜனநாயகம் தோற்றாலும் இனநாயகம் வென்றுள்ளது. ஆட்சியாளர்கள் இனவாதத்தால் வென்றுள்ளனர் - என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டு. மாவட்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் ஞா.சிறீநேசன் தெரிவித்தார்.

அவர் இவ்விடயம் தொடர்பாக மேலும் தெரிவிக்கையில்,

இலங்கை சுதந்திரமடைந்து 74 ஆண்டுகள் கடந்துள்ளன. 16 நாடாளுமன்றத் தேர்தல்கள் நடைபெற்றுள்ளன. இத்தேர்தல்கள் அனைத்திலும் பேரின அடிப்படைவாதக் கட்சிகள் வெற்றிபெற்று ஆட்சிபீடமேறியுள்ளன. அதாவது 74 சதவீத சிங்கள மக்களின் பெரும்பான்மையானோரின் ஆதரவைபெற்ற கட்சிகள் ஆளும் அதிகாரத்தினைப் பெற்றன. ஐக்கிய தேசியக் கட்சி, ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி, பொதுஜன பெரமுன ஆகிய அடிப்படைவாதக் கட்சிகளே ஆளும் கட்சிகளாக இருந்துவந்துள்ளன. இடதுசாரிக் கட்சிகள் எதுவும் பெரும்பான்மைப் பலத்துடன் ஆட்சியைக் கைப்பற்றவில்லை. அவை இனவாதக் கட்சிகளினால் ஜீரணிக்கப்பட்டுள்ளன. ஆயினும், பேரினவாதப் போக்குடைய பிரதான கட்சிகள் ஆட்சியதிகாரத்தினை தமது இனவாதச் சொத்தாகப் பயன்படுத்தி வந்துள்ளன.

சிறுபான்மைத் தமிழ்க் கட்சிகள், முஸ்லிம் கட்சிகள் ஆட்சியதிகார விடயத்தில் பெரியளவு செல்வாக்கு செலுத்துவதில்லை. இந்நிலையில், இலங்கை ஜனநாயகம் சிங்கள இனநாயகமாக இருந்துவருகின்றது. 26 வீதமான தமிழ் பேசும் மக்களின் வாக்குகள் இந்த சிங்கள இனநாயகத்தைத் தீர்மானிப்பதில் அழுத்த சக்தியாக இருப்பதில்லை. அதேவேளை, முஸ்லிம், மலையகத் தமிழ்க் கட்சிகள் சிங்களக் கட்சிகளுடன் இணைந்து அமைச்சர், பிரதியமைச்சர், இராஜாங்க அமைச்சர் பதவிகளுக்காக ஐந்தாண்டு நாடாளுமன்ற அரசியலைப் பயன்படுத்துகின்றன.

பேரின இனநாயக இனத்துவேசம் தேர்தல்களில் வெல்லும்போதெல்லாம் தேசிய ஐக்கியம், சகவாழ்வு, இன ஐக்கியம், பல்லின ஜனநாயகம், தன்னிறைவுப் பொருளாதாரம், அபிவிருத்தி, சட்டவாட்சி, மனித உரிமைகள், சமத்துவம், பல்லின கலாசாரம், ஒற்றையாட்சிமுறை, இனப்பிரச்சினைக்கான தீர்வு, வெளியுறவுக் கொள்கை, தேச வளங்களின் பாதுகாப்பு, விவசாயத்துறை, நாணயக்கொள்கை, தொழில் வாய்ப்புகள், விரயங்களின் கட்டுப்பாடு,

வலிந்து காணாமலாக்கப்பட்டோர் பிரச்சினை, புத்திஜீவிகளின் வெளியேற்றம், கடன்சுமைப் பிரச்சினை, மலையகத் தமிழர்களின் வாழ்வியல் நிலை, கைத்தொழிற்றுறை, ஏற்றுமதி வருவாய் போன்ற அனைத்தும் தோல்வியடைந்துள்ளன.

மொத்தத்தில் 74 ஆண்டுகளில் பல வழிகளிலும் நாடு தோற்றுள்ளது, நாட்டு மக்கள் தோற்றுள்ளார்கள்.

நாட்டுப் பொருளாதாரம் எக்கேடு கெட்டாலும் ஆடசியாளர்கள் பலரது வீட்டுப் பொருளாதாரம் வளர்ந்துள்ளது. மகாசங்க மதகுருமார்களின் ஆசிர்வாதம் மக்களுக்கு இல்லாவிட்டாலும் ஆட்சியாளர்களுக்கு உண்டு. தேசத்தின் வெற்றியை விடவும் தேர்தலின் வெற்றி இந்நாட்டில் முக்கியமானது. தேசத்தை இனவாதம் அழித்தாலும் தேர்தல் வெற்றிக்கு இனவாதம் தேவையாகவுள்ளது. ஆட்சியாளர்கள் இனநாயகத்தை விடப்போவதும் இல்லை, ஜனநாயகம் வெற்றிபெறப்போவதும் இல்லை. இனவாதத்தை உருவாக்குதல், வளர்த்தல், பிரயோகித்தல், மக்களை ஏமாற்றுதல், வெற்றியடைதல் இவைதான் ஆட்சியாளர்களின் அரசியல் சமூக பொருளாதார அத்தியாவசிய தேவையாகும்.

எனவே, இந்த நாட்டில் 74 சதவீத சிங்கள இனநாயகத்திற்குள் அடங்கி வாழவேண்டியதே 26 சதவீத தமிழ் பேசும் மக்களின் தலைவிதியாகும் என்று எழுதாத சிங்கள சமூகச் சட்டம் 26 சதவீதத்தினர் தலையில் எழுதப்பட்டதாக அதிகார ஆட்சியாளர் வர்க்கம் நினைக்கிறது. அதற்கான ஆமாம் சாமிகளாக தமிழ் பேசும் சில அரசியல்வாதிகளும் இருக்கவே செய்கிறார்கள். ஆமாம் சாமிகளுக்கு தமிழ் பேசும் மக்களின் உரிமைகளை அற்பசொற்ப சலுகைகளாக்கி பதவிகளாக - பணமாக - பந்தமாக சொகுசுகளாக அதிகாரவர்க்கத்தினர் வழங்கி அவர்களுக்கு சுகபோக இன்பம் அளிக்கிறார்கள்.

இந்நிலையில், இப்போது சமூக பொருளாதார அரசியல் இராஜதந்திரத் தோல்விகள் பின்னடைவுகள் நாட்டை வாட்டுகின்றன. ஆனால், சிங்களப் பேரினநாயகம் அடிப்படைவாதத்தால் அரியணை ஏறிக்கொண்டு இருக்கின்றது. இந்த வெற்றிகள் நாட்டையும் மக்களையும் தோல்விக்குள்ளாக்கி வருகின்றன. உரிமை இழந்த மக்கள் உள்நாட்டுப் பொறிமுறையால் எதனையும் சாதிக்கவில்லை. இதனால் சர்வதேச பொறிமுறையைத் தமிழ் மக்கள் நம்பவேண்டிய நிலைக்கு பேரினவாதம் நிர்ப்பந்தித்துள்ளது - என்றார்.

அம்பாறை மாவட்டத்தில் குரங்குகளின் தொல்லையால் மக்கள் அசௌகரியம்

உரிய அதிகாரிகள் நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை

(அட்டாளைச்சேனை நிருபர்)

அம்பாறை மாவட்டத்தின் பல்வேறு பிரதேசங்களிலும் இன்றைய காலகட்டத்தில் குரங்குகளின் தொல்லை அதிகரித்திருப்பதாக பாதிக்கப்பட்ட மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.

அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் இவ்வாறான குரங்குகளின் தொல்லை அதிகரித்து வருவதாக பிரதேச மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். இதேவேளை, குரங்குகளின் தொல்லை சில நாட்களில் நகர்ப் பகுதிகளிலும் இடம்பெற்று வருவதாகவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

இறக்காமம், மருதமுனை, அக்கரைப்பற்று, நற்பிட்டிமுனை, அட்டாளைச்சேனை, நிந்தவூர், சாய்ந்தமருது, கல்முனை, பொத்துவில், ஒலுவில், பாலமுனை, அஷ்ரப்நகர் உள்ளிட்ட அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பகுதிகள் பலவற்றிலும் குரங்குகளின் தொல்லை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாக சுட்டிக்காட்டப்படுகின்றது.

ஆற்றங்கரையோரம் மற்றும் சிறிய பற்றைக் காடுகள் போன்றவற்றிலிருந்து மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு இக்குரங்குகள் உட்புகுவதால், பொதுமக்கள் நாளாந்தம் பல்வேறான இன்னல்களுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இக்குரங்குகள் வீட்டுத் தோட்டங்களிலுள்ள காய்கறி வகைகள், மேட்டு நிலப்பயிர்ச்செய்கைகள், மரம், செடி, கொடிகள் போன்றவற்றை நாசம் செய்து வருவதுடன், வீடுகளின் கூரைகள், ஜன்னல்கள் போன்றவற்றையும் சேதமாக்கி வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

சிறுவர்கள் மற்றும் வயோதிபர்களுக்கும் இக்குரங்குகள் தொல்லை கொடுத்து வருவதாகவும் தெரிவிக்கும் மக்கள், சில சந்தர்ப்பங்களில் சிறுவர்களின் கைகளில் இருக்கும் உணவுப் பொருட்களை தட்டிப் பறித்தெடுத்து, அச்சிறுவர்களையும் தாக்கிய சம்பவங்களும் நடைபெற்றுள்ளதாகவும் சம்பந்தப்பட்ட மக்கள் மேலும் சுட்டிக்காட்டுகின்றனர்.

தமது ஆடைகளை உலர்த்துவதற்காக கொடிகளில் போடுகின்றபோது இக்குரங்குகள் அதனை எடுத்துச்சென்று நாசம் செய்வதாகவும் தெரியவருகின்றது. வீட்டுக் கூரைகள், பொது நிறுவனங்களின் கட்டடங்கள் போன்றவற்றில் மிக நீண்டநேரமாக தரித்துநிற்கும் இக்குரங்குகளை அப்புறப்படுத்துவதற்கு பொதுமக்கள் பல்வேறான சிரமங்களை எதிர்நோக்கி வருவதுடன், சில சந்தர்ப்பங்களில் இக்குரங்குகள் சிறுவர்கள் மற்றும் பெண்கள் போன்றோரை தாக்கிய சம்பவங்களும் நிகழ்ந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

வீடுகள் மற்றும் வர்த்தக நிலையங்கள் போன்றவற்றுள் இக்குரங்குகள் உட்புகுவதால் சிறுவர்கள், பெண்கள், சிரேஷ்ட பிரஜைகள் போன்றோர் வீடுகளில் இருப்பதற்கும் அஞ்சுவதாகவும் இவர்கள் தெரிவிக்கின்றனர். இதேவேளை, கிராமப்புறங்களில் பயணிக்கும் பஸ்கள், சிற்றூர்திகள் உள்ளிட்ட வாகனங்களில் தாவிக்கொண்டு நகர்ப்புறங்களுக்கும் பயணிக்கும் குரங்குகள் அப்பகுதி மக்களையும் அச்சத்திற்குள்ளாக்கி வருகின்றன.

தற்காலத்தில் அம்பாறை மாவட்டத்தின் கரையோரப் பிரதேசங்களில் நெல் அறுவடை நடைபெற்று வருவதனால், வயல் நிலங்களிலிருந்து மக்கள் குடியிருப்புப் பகுதிகளுக்கு உழவு இயந்திரங்களில் கொண்டுசெல்லப்படும் நெல் மூடைகளில் அமர்ந்தவாறு குரங்குகள் செல்வதனால், வயல் பகுதிகளிலுள்ள பெருந் தொகைக் குரங்குகள் தற்காலத்தில் கிராம மற்றும் நகர்ப் பகுதிகளுக்கு ஊடுருவி வருவதாகவும் பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்விடயம் தொடர்பில் சம்பந்தப்பட்ட தரப்பினர் உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என அம்பாறை மாவட்ட பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

திருமலை சிவில் சமூக பிரதிநிதிகளை சந்தித்தார் நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார

(பதுர்தீன் சியானா)

முன்னாள் போராளிகளையும், சிவில் சமூக பிரதிநிதிகளையும் திருகோணமலையிலுள்ள பிரபல ஹோட்டல் ஒன்றில் வைத்து நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார நேற்று (25) சந்தித்தார்.

திருகோணமலைக்கு விஜயம் மேற்கொண்ட நீர்வழங்கல் அமைச்சர் வாசுதேவ நாணயக்கார, சிவில் சமூக அமைப்பின் சார்பாக நிக்கலஸ் விடுத்த வேண்டுகோளுக்கிணங்க அவர்களை சந்தித்தார்.

இதன்போது முன்னாள் போராளிகள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாகவும் காணாமலாக்கப்பட்டோர் தொடர்பிலான பிரச்சினைகள் தொடர்பாகவும் இதன்போது ஆராயப்பட்டது.

அத்துடன், திருகோணமலை மாவட்டத்தில் சுற்றுலாப்பயணிகளின் வீதம் அதிகரித்து வருகின்ற நிலையில், சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்கான வசதிகளை செய்ய வேண்டுமெனவும் முன்னாள் போராளிகள் தொடர்பில் கரிசனங்காட்டி வேலைவாய்ப்புகளை பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் இதன்போது சமூக அமைப்பின் பிரதிநிதி நிக்கலஸ் கோரிக்கை விடுத்தார்.

இதேவேளை, திருகோணமலை மாவட்டத்தில் இருக்கின்ற பிரச்சினைகளை அரசாங்கத்திற்கு நேரடியாக தெரிவிப்பதற்கு பிரதிநிதி ஒருவரை நியமிக்க நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அவர் இதன்போது சுட்டிக்காட்டினார்.

இச்சந்திப்பின்போது நீர்வழங்கல் அமைச்சின் பிரதி தலைவர் ஜீ.எல்.டி.திலகரத்ன முன்னாள் போராளிகள் ஆகியோர் கலந்துகொண்டனர்.

அதிகாரப்பகிர்வில் 13ஆவது திருத்தத்தின் நோக்கு நிலை கருத்தரங்கு மட்டக்களப்பில்

(வீரமுனை நிருபர்)

தமிழ்த் தேசிய வாழ்வுரிமை இயக்கத்தின் ஏற்பாட்டில் அதிகாரப்பகிர்வில் 13ஆவது திருத்தத்தின் நோக்கு நிலை கருத்தரங்கு மட்டக்களப்பு பொது நூலக கேட்போர் கூடத்தில் நாளை 27ஆம் திகதி காலை 10 மணிக்கு இடம்பெறவுள்ளது.

வாழ்வுரிமை இயக்கத்தின் தலைவர் வீ.எஸ்.சிவகரன் தலைமையிலான இந்நிகழ்வில், 'தமிழ்பேசும் மக்களின் ஐக்கியமும் அதிகாரப் பகிர்வும்' எனும் தலைப்பில் பேராசிரியர் றமீஸ் அப்துல்லாவும் 'இராஜதந்திர நோக்கு நிலையில் தமிழர் அரசியல்' எனும் தலைப்பில் அரசியல் ஆய்வாளர் யதீந்திராவும் 'கிழக்கு மக்களின் இருப்பும் அரசியல் அணுகுமுறைகளும்' எனும் தலைப்பில் த.வசந்தராசாவும் மற்றும் அறிவாந்த சமூகமும் அரசியல் இருப்பும் தொடர்பாக வா.குணாளனும் உரையாற்றும் அதேவேளை, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களான ஜனாதிபதி சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், கோவிந்தன் கருணாகரம், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் பா.அரியநேத்திரன் ஆகியோரும் கருத்துரைகளை வழங்கவுள்ளனர்.

சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலை வளாகத்தில் மேக நோயியல் வைத்திய நிபுணர் ஸனூஸுக்கு பாராட்டு

(மாவடிப்பள்ளி நிருபர்)

கல்முனை பிராந்திய பாலியல் ஆரோக்கியம் மற்றும் பாலியல் தொற்று நோய்கள் பிரிவினால் ஏற்பாடுசெய்யப்பட்ட கௌரவிப்பு நிகழ்வொன்று சாய்ந்தமருது மாவட்ட வைத்தியசாலை வளாகத்திலுள்ள அதன் அலுவலகத்தில் நேற்று முன்தினம் 24 இடம்பெற்றது.

பிரிவின் பொறுப்பு வைத்திய அதிகாரி டாக்டர் எம்.என்.எம்.தில்ஷான் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் ஐ.எல்.எம்.றிபாஸ் கலந்துகொண்டார்.

மட்டக்களப்பு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்தியர் ஜீ.சுகுணன் கௌரவ அதிதியாகக் கலந்துகொண்டதுடன், சாய்ந்தமருது பிரதேச வைத்தியசாலையின் பிரதேச வைத்திய அதிகாரி டாக்டர் எம்.எச்.கே.ஸனூஸ் காரியப்பர் விசேட அதிதியாகக் கலந்துகொண்டார்.

இந்நிகழ்வில் இப்பிரிவின் மேக நோயியியல் விசேட வைத்திய நிபுணர் டாக்டர் கே.ஏ.சி.ஆர். விஜேசேகர மேற்படிப்பிற்காக வெளிநாடு செல்வதை முன்னிட்டும் இப்பிராந்தியத்திற்கு இவர் ஆற்றிய சேவைகளை நினைவுகூர்ந்தும் பாராட்டி கௌரவிக்கப்பட்டார்.

அத்துடன், முன்னாள் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளராக பணியாற்றி கல்முனை பிராந்தியத்திற்கு சேவைகள் செய்து மட்டக்களப்பிற்கு இடமாற்றம் பெற்றுச்சென்ற வைத்தியர் ஜீ.சுகுணனும் பாராட்டிக் கௌரவிக்கப்பட்டார்.

கிழக்கு செய்திகள்
eastthamilan@gmail.com

வலம்புரி சங்குடன் மட்டக்களப்பில் ஒருவர் கைது

(கனகராசா சரவணன்)

மட்டக்களப்பு வாழைச்சேனை பொலிஸ் பிரிவிலுள்ள கிரான் பிரதேசத்தில் இரண்டு இலட்சத்து 25 ஆயிரம் ரூபா பெறுமதியான வலம்புரி சங்கு ஒன்றை விற்பனைக்காக எடுத்துவந்த வாழைச்சேனையைச் சேர்ந்த ஒருவரை நேற்று முன்தினம் (24) மாலை கைது செய்துள்ளதாக மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தெரிவித்தார்.

மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் சுகத் மாசிங்கவின் வழிநடத்தலில் சம்பவதினமான நேற்று மாலை குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி பி.எஸ்.பி.பண்டார தலைமையிலான பொலிஸார், இரண்டு இலட்சத்து 25 ஆயிரம் ரூபாவுக்கு வலம்புரி சங்கு வாங்குவதுபோல் நடித்து சங்கை கிரான் பகுதிக்கு எடுத்துவருமாறு தெரிவித்துள்ளனர்.

இதனையடுத்து குறித்த நபர் வலம்புரி சங்கை விற்பனைக்காக எடுத்துகொண்டு வந்தபோது கைதுசெய்யப்பட்டு, வாழைச்சேனை பொலிஸாரிடம் ஒப்படைத்துள்ளதாகவும் குறித்த நபரை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுவருவதாகவும் அவர் தெரிவித்தார்.

திருகோணமலை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக விஜயதாசன் நியமிப்பு

(கந்தளாய் நிருபர்)

திருகோணமலை மாவட்ட திட்டமிடல் பணிப்பாளராக திருமதி கே.விஜயதாசன் நியமிக்கப்பட்டுள்ளார். நேற்று முன்தினம் (24) இவர் தம் கடமைகளை மாவட்ட செயலகத்தில் சுபநேரத்தில் ஆரம்பித்தார்.

இலங்கை திட்டமிடல் சேவையின் விசேட தர உத்தியோகத்தரான இவர், 1994ஆம் ஆண்டு இலங்கை திட்டமிடல் சேவை திறந்த பரீட்சை மூலமாக திட்டமிடல் சேவையில் இணைந்து கொண்டார்.

யாழ்ப்பாண பல்கலைக்கழகத்தின் கலைப்பட்டதாரியான இவர், தம்பலகாமம் பிரதேச செயலக உதவித் திட்டமிடல் பணிப்பாளராக அரச சேவையில் முதல் பணியை ஆரம்பித்தார்.

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலகம், குச்சவெளி பிரதேச செயலகங்களில் உதவித் திட்டமிடல் பணிப்பாளராகவும் திருகோணமலை மாவட்ட செயலகத்தில் பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் மற்றும் மாவட்ட விவசாயப் பணிப்பாளராகவும் (பதில்) கடமையாற்றியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

மாவட்ட திட்டமிடல் பணிப்பாளர் பதவியை பெற்றுக்கொள்வதற்கு முன்னர் இவர் மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக்கல்வி, கல்விச்சேவைகள் மற்றும் பாடசாலை உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் பணிப்பாளர் நாயகமாக கடமையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

நிமலராஜன் கொலைச் சந்தேகநபர் நெப்போலியன் லண்டனில் கைது

இரட்டை கொலை வழக்கில் இரட்டை மரண தண்டனை விதிக்கப்பட்ட கொலை குற்றவாளியும், ஊடகவியலாளர் ம. நிமலராஜன் கொலை வழக்கின் பிரதான சந்தேக நபருமான நெப்போலியன் என்று அழைக்கப்படும் எஸ்.ரமேஸ் லண்டனில் கைது செய்யப்பட்டுள்ளதாக வெளிநாட்டு ஆங்கில ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

யாழ்ப்பாணம் ஊர்காவற்றுறை பகுதியில் கடந்த 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக்காக சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது ஊர்காவற்றுறை நாரந்தனை எனும் இடத்தில் குழு ஒன்று வழிமறித்து துப்பாக்கியால் சுட்டும், வாளால் வெட்டியும், இரும்புக் கம்பிகள், தடிகளால் தாக்குதல்கள் மேற்கொண்டது.

அத்தாக்குதலில் யாழ்.பல்கலைக்கழக ஊழியர் ஏரம்பு பேரம்பலம் மற்றும் ரெலோ அமைப்பின் ஆதரவாளரான யோகசிங்கம் கமல்ஸ்ரோன் ஆகிய இருவரும் படுகொலை செய்யப்பட்டனர்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான மாவை சேனாதிராஜா, எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் ரவிராஜ் உள்ளிட்ட 18 பேர் படுகாயங்களுக்கு உள்ளாகியிருந்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பிலான வழக்கு விசாரணைகளின் அடிப்படையில் 2016ஆம் ஆண்டு டிசம்பர் 07ஆம் திகதி யாழ்.மேல் நீதிமன்ற நீதிபதி ம. இளஞ்செழியன், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியை சேர்ந்த நெப்போலியன் என்று அழைக்கப்படும் எஸ்.ரமேஸ், மதன் என்று அழைக்கப்படும் நடராஜா மதனராசா உள்ளிட்ட மூவரை குற்றவாளிகளாக கண்டு தீர்ப்பளித்தார்.


படுகொலை செய்யப்பட்ட ஊடகவியலாளர் ம. நிமலராஜன்

அதில் நெப்போலியன் மற்றும் மதன் என்போர் இங்கிலாந்து நாட்டில் தலைமறைவாக இருந்தனர்.

அதனால், எஸ். ரமேஸ் அல்லது நெப்போலியன், நடராஜா மதனராஜா அல்லது மதன் இருவருக்கு யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டதுடன், வெளிவிவகார அமைச்சு, நீதி அமைச்சு, சட்ட மா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸ் மா அதிபர் திணைக்களம் ஆகியன இணைந்து இந்தக் குற்றவாளிகள் இருவரையும் நாடு கடத்த உரிய நடவடிக்கை எடுக்குமாறும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் கட்டளை வழங்கியிருந்தது.

அதேவேளை, கடந்த 2000ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி இரவு 08 மணியளவில் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் வீட்டில் செய்தி தயாரிப்பு பணியில் ஈடுபட்டிருந்த வேளை சுட்டு படுகொலை செய்யப்பட்டார்.

குறித்த படுகொலையின் பிரதான சந்தேகநபர் நெப்போலியன் என பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் இனங்காணப்பட்டு, கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதன் பின்னர் வழக்கு விசாரணைக்கு சமுகமளிக்காது தலைமறைவானார்.

இந்நிலையிலேயே லண்டனில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

இதேவேளை, "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது தாக்குதல் நடத்தினார்கள் இரட்டை படுகொலை செய்தார்கள் என குற்றம் சாட்டப்பட்டு யாழ்.மேல் நீதிமன்றினால் குற்றவாளிகள் என இனம் காணப்பட்டு இரட்டை மரண தண்டனை வழங்கப்பட்ட மூவரும் குற்றவாளிகள் அல்ல. அந்த தாக்குதல் சம்பவத்துக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் எந்த தொடர்பும் இல்லை.

குறித்த இரு நபர்களும் தற்போது வெளிநாட்டில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் வெளிநாடுகளில் எமது கட்சியின் செயற்பாடுகளை தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றார்கள்.

அவர்களுக்கு எதிராக சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர்களை சர்வதேச பொலிஸார் பிடித்தால், பிடித்து இங்கே கொண்டு வரட்டும்.

தற்போது மேல் நீதிமன்ற தீர்ப்பினை எதிர்த்து, மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. அதனால் மேற்கொண்டு அந்த வழக்கு தொடர்பில் கருத்து தெரிவிக்க விரும்பவில்லை" என கடந்த 2016 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி யாழில் உள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது கட்சியின் செயலாளரும், தற்போதைய கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

இளைஞரைத் தேடி இலங்கை வந்த நெதர்லாந்து பெண் சடலமாக மீட்பு

வெள்ளவத்தையில் சம்பவம்

மர்மமான முறையில் உயிரிழந்த நிலையில், நெதர்லாந்தைச் சேர்ந்த பெண்ணொருவரின் சடலம் வெள்ளவத்தை தொடர்மாடி குடியிருப்பொன்றிலிருந்து நேற்று முன்தினம் (24) இரவு மீட்கப்பட்டதாக வெள்ளவத்தை பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நெதர்லாந்து நாட்டைச் சேர்ந்த 67 வயதுடைய கலிடீன் நிஷா காடன் என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

டிக்டொக் சமூக வலைத்தளத்தினூடாக அறிமுகமான இளைஞரொருவருடன் காதல் தொடர்பு பேணிவந்துள்ள குறித்த பெண், அவரை தேடி இலங்கைக்கு வந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். இலங்கை வந்து குறித்த இளைஞருடன் குறித்த வீட்டில் தங்கியிருந்துள்ளதாகவும் பொலிஸார் குறிப்பிட்டுள்ளனர்.

இவரது உயிரிழப்புக்கான காரணம் இதுவரையில் உறுதிப்படுத்தப்படவில்லை என்பதுடன், சடலம் களுபோவில தெற்கு கொழும்பு போதனா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் வெள்ளவத்தை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.

எதிர்வரும் போகத்துக்குத் தேவையான உரத்தை தட்டுப்பாடுகள் இன்றி வழங்குவதற்கு திட்டம்

கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த தெரிவிப்பு

அடுத்த போகத்துக்குத் தேவையான உரத்தை தட்டுப்பாடு இன்றி வழங்குவதற்குத் திட்டம் தயாரிக்கப்பட்டிருப்பதாகவும், இதற்குத் தேவையான பொறிமுறையொன்று உருவாக்கப்பட்டிருப்பதாகவும் கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்தார். ஒன்பதாவது நாடாளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரின் முதலாவது கமத்தொழில் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக் கூட்டம் அண்மையில் நடைபெற்றபோதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

உலக சந்தையில் உரத்தின் விலை பாரிய அளவில் உயர்வடைந்திருப்பதாலும், இந்நாட்டில் இரசாயன உரத்துக்கான தடையுடன் இணைந்ததாக சந்தையில் காணப்படும் உரத் தொகையை அதிக விலையில் விற்பனை செய்ய வியாபாரிகள் நடவடிக்கை எடுத்திருப்பதாகவும், எதிர்வரும் காலத்தில் இவ்வாறு உயர்ந்த விலையில் விற்பனை செய்யும் வியாபாரிகளுக்கு வழங்கப்பட்டுள்ள அனுமதிப் பத்திரத்தை இரத்துச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.

மேலும், இந்தப் போகத்திலிருந்து இவற்றை அரசாங்கம் உரிய முறையில் கட்டுப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருப்பதாகவும் அமைச்சர் குழுவில் தெரிவித்தார். உலக சந்தையில் அதிகரித்துள்ள விலைகளைக் கவனத்தில் கொண்டு விலைகளை ஒழுங்குபடுத்த எதிர்பார்த்திருப்பதாகவும் அமைச்சர் இக்குழுவின் முன்னிலையில் தெரிவித்தார். அத்துடன், சேதன உரத்தை விவசாயிகளுக்கு பெற்றுக் கொடுப்பது என்ற அரசாங்கத்தின் கொள்கையில் மாற்றம் இல்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

உள்நாட்டில் பசுமை விவசாயத்தை மேலும் தரம்மிக்கதாகப் பேணுவதே அரசாங்கத்தின் பிரதான நோக்கம் என்றும், இதற்காக எப்பொழுதும் உரிய நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் இக்கூட்டத்தில் கலந்துகொண்ட இராஜாங்க அமைச்சர் சஷீந்திர ராஜபக்ஷ தெரிவித்தார்.

இலங்கையில் ஒவ்வொரு மாவட்டத்திலும் காணப்படும் நிலம் மற்றும் சூழல் நிலைமைகளுக்கு அமைய வழங்கப்பட வேண்டிய உரத்தின் அளவு மற்றும் உர வகை வேறுபடுவதாகவும், ஒவ்வொரு மாவட்டத்தின் தேவையைக் கண்டறிவதற்கு மாவட்ட செயலாளர், கமநல உதவி ஆணையாளர், கமநல உதவிப் பணிப்பாளர் உள்ளிட்ட அதிகாரிகளைக் கொண்ட உற்பத்திக் குழு அமைக்கப்பட்டு அதன் ஊடாக உரத்தை வழங்குவதற்கான முறைமையொன்று ஒழுங்குபடுத்தப்படும் என்றும் இராஜாங்க அமைச்சர் தெரிவித்தார்.

2019/20 வருடத்துக்கான லங்கா பொஸ்பேட் நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை, 2018/19 வருடத்துக்கான கொழும்பு கொமர்ஷல் உர நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை, 2019 வருடத்துக்கான ஹெக்டர் கொப்பேகடுவ விவசாய ஆராய்ச்சி நிறுவனத்தின் வருடாந்த அறிக்கை உள்ளிட்ட அறிக்கைகள் குழுவில் ஆராயப்பட்டன. இக்கூட்டத்தில் கமத்தொழில் அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே, அமைச்சர்களான சஷீந்திர ராஜபக்ஷ, டி.பி.ஹேரத், எஸ்.வியாழேந்திரன் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க அதிகாரிகள் உள்ளிட்ட பலரும் கலந்துகொண்டனர்.

தரம் பிரித்து கழிவுப் பொருட்களை சேகரிக்கும் கழிவுத் தொட்டிகள் மன்னார் நகரத்தில் அமைப்பு

(மன்னார் நகர் செய்தியாளர்)

பசுமையான நகரத் திட்டத்தின் கீழ் மன்னார் நகரை அழகுபடுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ் முதல் கட்டமாக மன்னார் நகரை சுத்தமாக வைத்திருக்கும் நோக்குடன் கழிவுப் பொருட்களை தரம் பிரித்து, சேகரிக்கும் கழிவுத் தொட்டிகள் நேற்றுமுன்தினம் (24) காலை மன்னார் நகர பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன.

மன்னார் நகரசபைக்கு உட்பட்ட பொது இடங்களில் கழிவுப் பொருட்களை தரம் பிரித்து சேகரிக்கும் வகையில் மன்னார் நகர சபையினால் குறித்த கழிவுப் பொருட்களை சேகரிக்கும் தொட்டிகள் அமைக்கப்பட்டுள்ளன.

கடதாசி மற்றும் காட்போட் வகையான கழிவுப் பொருட்களை தனியாகவும் பிளாஸ்ரிக் மற்றும் பொலித்தீன் கழிவுப் பொருட்களை தனியாகவும் உணவுப் பொருட்கள் மற்றும் உக்கக்கூடிய பொருட்களை தனியாகவும் சேகரிக்கும் வகையில் மூன்று கழிவுத் தொட்டிகள் தெரிவு செய்யப்பட்டு ஒவ்வொரு இடங்களிலும் அமைக்கப்பட்டுள்ளன.

மக்கள் கழிவுப் பொருட்களை தரம் பிரித்து குறித்த தொட்டிகளில் இட வேண்டும்.

இதன் ஆரம்ப நிகழ்வு நேற்றுமுன்தினம் காலை 9.30 மணியளவில் மன்னார் நகர சபையின் தலைவர் ஞா.அன்ரனி டேவிட்சன் தலைமையில் இடம்பெற்றது.

இதன் போது நகர சபையின் செயலாளர், உறுப்பினர்கள் மற்றும் நகர சபை பணியாளர்களும் கலந்து கொண்டிருந்தனர்.

சிறுவர்களுக்கு கைபேசிகளை கொடுப்பதில் அவதானம் தேவையென பொலிஸார் அறிவுறுத்து

சிறுவர்களுக்கு கையடக்கத் தொலைபேசிகளை வழங்குவதில் பெற்றோர்கள் அவதானமாக செயற்பட வேண்டுமென பொலிஸார் அறிவுறுத்தியுள்ளனர். நவகமுவவில் 14 வயதான சிறுமி 15 வயதான சிறுவனால் துஷ்பிரயோகத்துக்குட்படுத்தப்பட்டு கர்ப்பிணியான சம்பவம் தொடர்பிலேயே இந்த அறிவுறுத்தல் பொலிஸாரால் வழங்கப்பட்டுள்ளது.

நவகமுவ பிரதேசத்தில் 14 வயது சிறுமியை 07 மாத கர்ப்பிணியாக்கிய 15 வயது மாணவனை பொலிஸார் கடந்த புதன்கிழமை கைது செய்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட சிறுமி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக சம்பவம் தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்டு வரும் நவகமுவ பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த மாணவிக்கு இணையவழி கல்விக்காக பெற்றோர் வழங்கிய கையடக்கத் தொலைபேசியில் இருந்து இணையத்தில் ஆபாசப் படங்களை பார்க்கும் பழக்கம் ஏற்பட்டுள்ளதாக விசாரணையில் தெரியவந்துள்ளது.

14வயது சிறுமி கர்ப்பிணியான சம்பவம் தொடர்பில் வெளியான அதிர்ச்சித் தகவல்கள்

இதேவேளை, மாணவனின் பெற்றோர்கள் சில மாதங்களுக்கு முன் கல்வி நடவடிக்கைகளுக்காக 27 ஆயிரம் ரூபா கொடுத்து கையடக்கத் தொலைபேசியை வாங்கிக் கொடுத்துள்ளமை பொலிஸ் விசாரணைகளில் மேலும் தெரியவந்துள்ளது

சந்தேகத்துக்குரிய மாணவனிடம் நடத்திய விசாரணையில், அந்த தொலைபேசியில் ஆபாச காணொளிகளை பார்வையிட்டதாகவும், அதன்படி குறித்த சிறுமியிடம் அவ்வாறு நடந்து கொண்டதாகவும் குறிப்பிட்டுள்ளார்.

இந்நிலையில், தனக்கு அடிக்கடி வயிற்று வலி ஏற்படுவதாக சிறுமி தாயிடம் கூறியுள்ளார்.

இதையடுத்து, முல்லேரியா வைத்தியசாலைக்கு சிறுமியை அழைத்துச் சென்று முன்னெடுக்கப்பட்ட மருத்துவ பரிசோதனையில் சிறுமி கர்ப்பமாக இருப்பது தெரியவந்தது.

வீட்டில் யாரும் இல்லாத நேரத்தில் சிறுமியின் வீட்டுக்கு வந்ததாக பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இச்சம்பவம் தொடர்பில் கைது செய்யப்பட்ட 15 வயது மாணவன் கடுவளை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் சிறுவர் காப்பகத்தில்வைத்து விசாரணை நடத்துவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அரச நாடக விழா -2021 மருதானை எல்பின்ஸ்டன் மண்டபத்தில் நடைபெற்றபோது இரண்டாம் நாள் நிகழ்வுக்கு பிரதம அதிதியாக கலந்து சிறப்பித்த டவர் ஹோல் நிதியத்தின் பணிப்பாளர் சபை உறுப்பினர் புரவலர் ஹாசிம் உமர் மங்கல விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும் 'கண்டறியாத டொக்டர்ஸ்' எனும் குறுநாடக தயாரிப்பாளர் என்.ஹரனுக்கு ஞாபகார்த்த விருது வழங்கி வைப்பதையும் அருகில் நிலையத்தின் பணிப்பாளர் தரணி அனோஜா கமகே, பிரபல திரைப்பட நாடக நடிகர் ரொட்னி வர்ணகுலசூரிய ஆகியோரை படங்களில் காணலாம்.

ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்புடன் இணையவழி செயலமர்வு

ஜப்பானில் உள்ள இலங்கைத் தூதரகத்தினால் ஏற்பாடு

ஜப்பானில் உள்ள இலங்கைத் தூதரகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இணையத்தள இணையவழி வலையமர்வில் 80இற்கும் மேற்பட்ட எதிர்கால ஜப்பானிய நிறுவனங்கள் பங்கேற்றன. ஜப்பானுக்கான இலங்கைத் தூதுவர் சஞ்சீவ் குணசேகர ஜப்பானுக்கும் இலங்கைக்கும் இடையிலான முதலீட்டு ஒருங்கிணைப்புகளை எடுத்துரைத்தார்.

தகவல் தொழில்நுட்பத்துறை, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி மற்றும் விவசாயத் தொழில்நுட்பத்தில் முதலீடு செய்வதை அவர் வலியுறுத்தினார். இலங்கையில் கிடைக்கும் உயர்தர கிரஃபைட்டில் 30வீத ஈ.வி. பெட்டரிகளுக்கான மூலப்பொருளாகும் எனக் குறிப்பிட்ட தூதுவர், உற்பத்தி செய்யப்படும் தயாரிப்புகளை இந்தியா மற்றும் பாகிஸ்தானுக்கு ஏற்றுமதி செய்யக்கூடிய வகையிலான ஒரு ஜிகா ஈ.வி. பெட்டரி தொழிற்சாலையை பரிசீலிக்குமாறு முன்மொழிந்தார்.

1.6 பில்லியனுக்கும் அதிகமான மக்களை அணுகக்கூடிய இந்தியா மற்றும் பாகிஸ்தானுடன் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளைக் கொண்டுள்ள ஒரே நாடு இலங்கை என தூதுவர் குணசேகர குறிப்பிட்டார்.

நொரிடேக்கின் இருப்பு மற்றும் இலங்கையின் களிமண் செயன்முறைகளின் உயர் தரத்தையும் வலியுறுத்திய அவர், மட்பாண்டங்கள் தொடர்பான எந்தவொரு உற்பத்தி நிறுவனத்துக்கும் இலங்கையைப் பரிசீலிக்குமாறு அழைப்பு விடுத்ததுடன், தற்போது காணப்படுகின்ற போட்டித் தொழிலாளர், முகாமைத்துவம் மற்றும் பயன்பாட்டு விகிதங்களைக் குறிப்பிட்டார்.

முதலீட்டு சபையின் தலைவர் ராஜா எதிரிசூரிய வரவேற்புரை ஆற்றியதுடன் முதலீட்டு சபையின் நிறைவேற்றுப் பணிப்பாளர் பிரசஞ்சித் விஜயதிலக விரிவான விளக்கவுரையை நிகழ்த்தினார்.

ஐக்கிய நாடுகள் கைத்தொழில் அபிவிருத்தி அமைப்பின் தலைவர் டோக்கியோ யுகோ யசுனகாவும் இந்த வலையமர்வில் பங்கேற்றார்.

இரண்டாம் உலகப் போரும்; இன்றைய உக்ரைன் போரும்:

மாறாத போரின் சுவடுகள் 1940இல் லண்டன்; 2022இல் கார்கிவ்

குடும்பம் குடும்பமாக உக்ரைன் மக்கள் கார்கிவ் சுரங்கப்பாதை நிலையத்தில் பதுங்கியிருந்தனர். இவையெல்லாம் பார்க்கும்போது, உலகம் எத்தனையோ அடையாளங்களை தொலைத்து மறந்து இருந்தாலும்கூட, மனிதர்கள் மாறவில்லை என்பதையே போரும் அதன் அடையாளங்களும் காட்டுகின்றன.





இரண்டாம் உலகப் போரின்போது நடந்த காட்சிகளைப்போன்றே, உக்ரைனின் கார்கிவ் நகரில் நடந்த காட்சிகளும் அமைந்ததால் அவை மறக்க முடியாத காட்சிகளாக அமைந்துள்ளன.

இரண்டாம் உலகப் போர் 1939ஆம் ஆண்டுமுதல் 1945ஆம் ஆண்டுவரை நடைபெற்றது. இந்தப் போரின்போது நேசப் படைகள் 3.4 மில்லியன் தொன் குண்டுகளை ஆசியா மற்றும் ஐரோப்பிய கண்டத்தில் வீசியதாக தெரிவிக்கப்படுகிறது. ஹிரோஷிமா, நாகசாகிக்கு அடுத்ததாக டோக்கியோ நகரின் மீதும் அணுகுண்டு வீச நேசநாட்டுப் படைகள் திட்டமிட்டிருந்தன. ஆனால், அதற்குள் ஜப்பான் சரணடைந்தது. இவ்வாறு வீசப்பட்ட குண்டுகள் பலவும் இன்னும் ஜேர்மனியில் மண்ணுக்கு அடியில் புதைந்து கிடக்கின்றன.

இப்போரில் அதிகம் பேரை இழந்தது சோவியத் ஒன்றியம்தான் (ரஷ்யா). போரின்போது அந்நாட்டில் 26.6 மில்லியன் பேர் உயிரிழந்தனர். இரண்டாம் உலகப் போரில் சுமார் 70 மில்லியன் பேர் உயிரிழந்தனர். 1.5 மில்லியன் குழந்தைகள் உயிரிழந்ததாக கூறப்படுகிறது.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு, உலகில் ஐரோப்பியர்களின் ஆதிக்கம் குறைந்து, சோவியத் ஒன்றியம் மற்றும் அமெரிக்காவின் ஆதிக்கம் ஓங்கியது. 1940ஆம் ஆண்டு செப்டெம்பர் 7ஆம் திகதி முதல், தொடர்ந்து 57 நாட்களுக்கு லண்டன் நகரின் மீது குண்டுவீச நடந்தது. அவ்வாறு குண்டுவீச்சு நடந்தபோது, உயிருக்குப் பயந்து ஆயிரக்கணக்கான மக்கள் ரயில்வே சுரங்கப்பாதையில் பதுங்கி இருந்தனர். அப்போது நடந்த போரின் நினைவுகளை வெளிப்படுத்தும் விதமாக, தற்போது உக்ரைனில் நடக்கும் போரின்போதும் உக்ரைனின் எல்லை நகரமான கார்கிவில் உள்ள சுரங்கப்பாதையில் ஆயிரக்கணக்கான மக்கள் சுரங்கப் பாதைகளில் பதுங்கியுள்ளனர்.

உக்ரைனுக்கு எதிராக நேற்றுமுன்தினம் தொடுக்கப்பட்ட முதல்நாள் போரின் இரவுகள் எப்படி இருந்தன என்பது மிகவும் கவலையளிக்கக்கூடியதாக இருந்தது. உக்ரைன் நாட்டின் பதுங்குகுழிகளிலும், சுரங்கப் பாதைகளிலும் மக்கள் தங்களது இரவை கழித்தனர். ரொக்கெட் தாக்குதல்களின் அச்சத்தால் வீதிகள் வெறிச்சோடிக் கிடந்தன. தலைநகரை ரஷ்யா தாக்கப்போகிறது என்ற கவலைகளுக்கு மத்தியில், ஊரடங்கு உத்தரவும் பிறப்பிக்கப்பட்டதால் கீவ் மாநகர தெருக்கள் வெறிச்சோடிக் காணப்பட்டன. குழந்தைகள் மற்றும் செல்லப்பிராணிகளுடன்

போரை தவிர வேறு வழியில்லை

ரஷ்ய ஜனாதிபதி புட்டின்



"உக்ரைனில் இனப்படு கொலையைத் தடுக்க போர் தொடங்குவதைத் தவிர வேறு வழியில்லை" என ரஷ்ய ஜனாதிபதி விளாடிர் புட்டின் தெரிவித்துள்ளார்.

"போரைத் தவிர வேறு வழியில்லை. அமெரிக்கா மற்றும் நேட்டோ படைகளுக்கு அடிபணிய முடியாது" என்று திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

"ரஷ்யாவின் கோரிக்கைக்கு உக்ரைனும் மேலை நாடுகளும் செவிசாய்க்கவில்லை என்பதால் போரை நடத்த வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதாகவும் புட்டின் தெரிவித்துள்ளார்.

தாக்குதலை நிறுத்தினால் பேச்சுவார்த்தைக்குத் தயார்

"உக்ரைன் இராணுவம் போரை நிறுத்தினால் நாங்கள் பேச்சுவார்த்தைக்குத் தயார்" என்று ரஷ்ய வெளியுறவுத்துறை அமைச்சர் அறிவித்துள்ளார்.

உக்ரைனுடன் நேற்று 2ஆம் நாளாகவும் ரஷ்யா தாக்குதலை தொடர்ந்த நிலையில் ரஷ்ய வெளியுறவு அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "அடக்குமுறையிலிருந்து உக்ரைனை மீட்பதே எங்களின் நோக்கம். உக்ரைன் உடன் பேச்சு நடத்தத் தயார்" என தெரிவித்துள்ளார்.

ரஷ்ய இராணுவம் நடத்திய தாக்குதலில் உக்ரைனை சேர்ந்த 127 பேர் கொல்லப்பட்டுள்ளதாக ஐ.நா. தகவல் அளித்துள்ளது.

உக்ரைன் தனித்துப் போரிடுகிறது; உதவி கேட்டும் உலக நாடுகள் முன்வரவில்லை

ஜனாதிபதி வொலோடிமிர் ஸெலென்ஸ்கி வேதனை

"ரஷ்யாவுக்கு எதிரான போரில் உக்ரைன் தனித்துவிடப்பட்டுள்ளது. உதவி கேட்டும் எந்த உலக நாடுகளும் உதவவில்லை" என உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமீர் ஸெலென்ஸ்கி வேதனை தெரிவித்துள்ளார்.

உக்ரைன் மீதான தாக்குதலை ரஷ்யா வியாழக்கிழமை தொடங்கிய நிலையில் அன்று இரவு நாட்டு மக்களிடம் உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் தெரிவிக்கையில், "ரஷ்யப் படைகளை எதிர்கொள்வதில் உக்ரைன் தனித்து விடப்பட்டு விட்டது. உக்ரைனுடன் சேர்ந்து ரஷ்யாவை எதிர்கொள்ள யாராவது இருக்கிறார்களா என்றால் யாரும் இல்லை என்பதுதான் பதில்.

இதுவரை நேட்டோ அமைப்பு உள்ளிட்ட 27 நாடுகளிடம் கேட்டுக்கொண்டேன். ஆனால், யாரும் உதவிக்கு வரவில்லை. நேரடியாக பல நாட்டின் தலைவர்களை

தொலைபேசியில் தொடர்புகொண்டு பேசினேன். யாரிடமும் பதில் இல்லை. அவர்கள் ரஷ்யாவுக்கு அஞ்சுகிறார்கள். ஆனால், உக்ரைன் எதற்கும் அஞ்சவில்லை; ரஷ்யாவிற்கு அஞ்சவில்லை.

எங்களுடன் போரிட யார் தயாராக இருக்கிறார்கள்? யாரும் இல்லை.

நேட்டோவில் உக்ரைன் இணைய தயாராக இருந்தது. இப்போது நேட்டோவில் உக்ரைனை உறுப்பினராக்க யார் தயாராக இருக்கிறார்கள்?

நேட்டோ அமைப்பில் இந்த நிமிடம்வரை உக்ரைன் உறுப்பினர் இல்லை. அந்த அமைப்பினர் இதுவரை உதவவில்லை. அவர்கள், உக்ரைன் மக்களுக்கு என்ன உத்தரவாதம் தர முடியும்?

நேட்டோவில் இணைப்பதாகக் கூறிய நாடுகள் அனைத்தும் இன்று அச்சத்தில் இருக்கின்றன.

ரஷ்யப் படைகள் முதலில் என்னையும் என் குடும்பத்தையும் குறிவைத்துள்ளன. நாங்கள் தலைநகர் கீவில்தான் இருக்கிறோம்" என்று உருக்கமாகத் தெரிவித்துள்ளார்.

உக்ரைன் ஜனாதிபதியின் உயிருக்கு ஆபத்தா?

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் நடைபெறும் மிகப் பெரிய தாக்குதலாக உக்ரைன் மீதான ரஷ்யாவின் படையெடுப்பு கருதப்படுகிறது.

உக்ரைன் தலைநகர் கீவ்வை நோக்கி ரஷ்ய இராணுவம் தொடர்ந்து முன்னேறிவரும் நிலையில், அவர்களுக்கு எதிராக உக்ரைன் பாதுகாப்புப் படை பதிலடி அளித்துவருகிறது. இந்நிலையில், தலைநகரிலேயே தொடர்ந்து தங்கவுள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி ஷெலென்ஸ்கி தெரிவித்துள்ளார்.

ரஷ்ய ஜனாதிபதி புட்டின் உத்தரவை தொடர்ந்து, நிலம், வான், கடல் என அனைத்து வழியாகவும் அந்நாடு உக்ரைன் மீது போர் தொடுத்துவரும் நிலையில், முக்கிய நகரங்கள் மீது ஏவுகணை, பீரங்கி குண்டு மழை பொழிந்து, துப்பாக்கிச்சூடும் நடத்தப்பட்டு வருகிறது. இதன் காரணமாக, அங்கிருந்து ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் வெளியேறியுள்ளதாக கூறப்படுகிறது. 12 பேர் உயிரிழந்துள்ளதாகவும் செய்திகள் வெளியாகியுள்ளன.

தலைநகர் கீவ்வை கைப்பற்றி அரசை கவிழ்ப்பதையே ரஷ்யா இலக்காக வைத்துள்ளது என அமெரிக்க மற்றும் உக்ரைன் அலுவலர்கள் தெரிவித்துள்ளனர். அதேபோல், கீவ்வின் வடக்கில் அணு உலையாக செயற்பட்ட செர்னோபிலை ரஷ்யா கியாழக்கிழமை கைப்பற்றியது. பெலாரஸிலிருந்து தலைநகருக்கு செல்ல குறுகிய பாதையாக செர்னோபில் கருதப்படுகிறது.

இப்படிப்பட்ட பதற்றமான சூழலில், வீடியோ வெளியிட்ட உக்ரைன் ஜனாதிபதி ஸெலென்ஸ்கி, "எதிரி என்னை 'நம்பர் ஒன்' இலக்காகக் குறித்துள்ளார். எனது குடும்பம்தான் 'நம்பர் 2' இலக்கு. அவர்கள் அரசின் தலைவரை அழித்து உக்ரைனை அரசியல் ரீதியாக அழிக்க நினைக்கிறார்கள். நான் தலைநகரில் தங்க போகிறேன். எனது குடும்பமும் உக்ரைனில்தான் உள்ளது" என்றார்.

ஸெலென்ஸ்கியின் பாதுகாப்பு குறித்து பேசிய அமெரிக்க வெளியுறவுத்துறை அமைச்சர் ஆன்டனி பிளிங்கன்,

"எனக்கு தெரிந்தவரை, ஸெலென்ஸ்கி ஜனாதிபதி பதவியில் தொடர்கிறார். உக்ரைனிலிருந்தான் உள்ளார். உக்ரைனிலுள்ள அரச அதிகாரிகள் என எங்கள் நண்பர்கள் அனைவரின் பாதுகாப்பில் நிச்சயமாக நாங்கள் அக்கறை கொண்டுள்ளோம்" - என்றார்.

உலக செய்திகள்

உருக்குலையும் உக்ரைன்

கவச உடையுடன் போர்க் களநிலவரங்களை ஆராய்வதற்காக சென்ற உக்ரைன் ஜனாதிபதி...

ரஷ்யா வசமானது தலைநகர் கீவ்

• கேர்சன் பகுதியில் பறக்கும் ரஷ்யக் கொடி

• செர்னோபில் அணுமின் நிலைய தளத்திலிருந்து அதிகரிக்கும் கதிர்வீச்சு

• உக்ரைனிலிருந்து 18-60 வயதுடையோர் வெளியேறத் தடை; 18,000 துப்பாக்கிகள் விநியோகம்

உக்ரைன் மீதான 2ஆவது நாள் போர் ரஷ்யா நேற்று தொடங்கியது. தலைநகர் கீவ் கைப்பற்றும் நோக்குடன் ரஷ்யப் படைகள் ஏவுகணைத் தாக்குதல்களை மேற்கொண்டுள்ளன.

இந்நிலையில், தலைநகர் கீவ்வை ரஷ்ய இராணுவம் முழுவதுமாக சுற்றிவளைத்தது. உக்ரைனின் லிவீவ் நகரத்தில் ரஷ்யப் படைகள் வான்வழித் தாக்குதல் நடத்த வாய்ப்புள்ளது. பாதுகாப்பான அறைகள் உள்ளிட்ட பாதுகாப்பான இடங்களுக்கு மக்கள் செல்ல அறிவுறுத்தப்பட்டுள்ளனர். ஒலிபெருக்கி மூலமாக மக்களுக்கு எயார் சைரன் எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

உக்ரைனின் கேர்சன் என்ற பகுதியை ரஷ்ய இராணுவம் கைப்பற்றியுள்ளது. கேர்சன் பகுதியிலுள்ள அரச கட்டடத்தில் ரஷ்ய தேசிய கொடியை வீரர்கள் ஏற்றினர். உக்ரைன் தலைநகரான கீவ் நகருக்குள் ரஷ்ய சீருலவுகும்பல்கள் புகுந்துவிட்டன. உக்ரைன் மக்கள் விழிப்புடன் இருக்குமாறு ஜனாதிபதி ஷெலன்ஸ்கி எச்சரிக்கை விடுத்துள்ளார்.

உக்ரைன் வீரர்களின் சீருடையில் ரஷ்யப் படை

வாகனங்களில் அதிவேகமாக உக்ரைன் தலைநகர் கீவ் நகருக்குள் ரஷ்யர்கள் நுழைந்து வருகின்றனர். கைப்பற்றப்பட்ட உக்ரைன் இராணுவ வாகனங்களில் உக்ரைன் வீரர்களின் சீருடையில் உள்ளே நுழைந்து வருவதாக உக்ரைன் பாதுகாப்பு துணை அமைச்சர் தகவல் தெரிவித்துள்ளார்.

செர்னோபில் அணுமின் நிலைய தளத்திலிருந்து கதிர்வீச்சு

இதேவேளை, உக்ரைனின் செர்னோபில் அணுமின் நிலைய தளத்திலிருந்து கதிர்வீச்சு அளவு அதிகரித்துள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. செர்னோபில் பகுதியை ரஷ்ய இராணுவம் கைப்பற்றியுள்ள நிலையில், உக்ரைன் அணுசக்தி நிறுவனம் தகவல் தெரிவித்திருக்கிறது.

சரணடைய மறுப்பு; 13 உக்ரைன் வீரர்கள் பலி

மேலும், ரஷ்யாவிடம் சரணடைய மறுத்து 13 உக்ரைன் வீரர்கள் நாட்டுக்காக தங்களது உயிரை இழந்துள்ளனர். ஸ்னேக் தீவை நெருங்கியபோது ரஷ்ய போர்க் கப்பலில் இருந்த வீரர்களை சரணடையும்படி வலியுறுத்தியுள்ளனர். சரணடைய மறுத்ததால் ஸ்னேக் தீவிலிருந்த 13 உக்ரைன் வீரர்களை ரஷ்ய கடற்படை கொன்றுள்ளது.

உக்ரைனிலிருந்து 18-60 வயதுடையோர் வெளியேறத் தடை

இதனிடையே உக்ரைனிலிருந்து 18 - 60 வயதுடையோர் வெளியேறத் தடை விதித்து அந்நாட்டு உள்துறை அமைச்சு உத்தரவிட்டுள்ளது. கீவ் நகரிலுள்ள மக்களுக்கு 18,000 தானியங்கி துப்பாக்கிகளை விநியோகித்துள்ளதாகவும் அரச தகவல் தெரிவித்துள்ளது.

நேட்டோ இராணுவ அமைப்பில் உக்ரைன் இணைவதற்கு எதிர்ப்புத் தெரிவித்துவந்த ரஷ்யா, உக்ரைன் எல்லையில் சுமார் 1.90 இலட்சம் துருப்புகளை குவித்ததால் எந்த நேரமும் போர்சூழல் உருவாகும் அபாயம் இருந்துவந்தது.

உலக நாடுகள் எதிர்பார்த்ததுபோலவே உக்ரைன் மீது போர் தொடுக்க ரஷ்ய இராணுவத்துக்கு ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் நேற்றுமுன்தினம் அதிகாலை அதிரடியாக உத்தரவிட்டார். புட்டின், தொலைக்காட்சியில் பேசிய சிறிதுநேரத்தில் உக்ரைன் மீது ரஷ்யப் படைகள் தாக்குதலை தொடங்கின.

உக்ரைன் தலைநகர் கீவ், கார்கிவ், டோனஸ்க், மைக்கோல், மரியூபோல் மற்றும் கிழக்கு உக்ரைனின் நகரங்களில் ரஷ்ய இராணுவம் குண்டுமழை பொழிந்தது. தரை வழி, கடல் வழி, வான் வழி என மும்முனை தாக்குதல் நடத்தி வருகிறது.

எங்கு பார்த்தாலும் குண்டுகள் வெடித்துச் சிதறும் சத்தம் கேட்டுக்கொண்டே இருக்கிறது. கட்டடங்கள், விமான நிலையங்கள், இராணுவத் தளங்கள் போன்றவை ஏவுகணைகளின் தாக்குதலில் பற்றி எரிந்து வருகின்றன.

பீதியில் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு ஓடி வருகின்றனர். குண்டுவீச்சில் குடியிருப்புகள் பலத்த சேதமடைந்துள்ளன. அதில் இருந்தவர்கள் உயிரிழந்தும் - படுகாயமடைந்தும் உள்ளனர்.

இனிமேல் நிலைமை என்னவாகுமோ என்ற அச்சத்தில் மக்கள் ஏரிகம் மையங்களிலும், கடைகளிலும் குவிந்துள்ளதுடன், பலர் அண்டைநாடுகளில் தஞ்சம் புகுந்து வருகின்றனர்.

ரஷ்யாவுடனான முதல்நாள் போரில் 137 பேர் உயிரிழந்துள்ளதுடன், 316 பேர் படுகாயமடைந்துள்ளதாக உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமிர் ஷெலன்ஸ்கி அறிவித்தார்.

800 ரஷ்ய படையினர்கள் பலி

இந்நிலையில், உக்ரைன் பாதுகாப்புத் தாக்குதலில் 800 ரஷ்ய வீரர்கள் கொல்லப்பட்டுள்ளதாக உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

மேலும், ரஷ்ய இராணுவத்தின் 30 போர்ப் பீரங்கிகள் அழிக்கப்பட்டதாகவும், ரஷ்ய விமானப்படையின் 7 விமானங்கள், 6 ஹெலிகொப்டர்களும் சுட்டு வீழ்த்தப்பட்டதாகவும் உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு அறிவித்துள்ளது.

ரஷ்யா, உக்ரைன் மீது தாக்குதலை தீவிரப்படுத்தியுள்ள நிலையில், பல்வேறு நிலைகளை கைப்பற்றியுள்ளது. உக்ரைனுடைய இராணுவத் தளவாடங்கள் மற்றும் விமான நிலையங்கள் அழிக்கப்பட்டுள்ளன என ரஷ்ய தரப்பில் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், நேற்று ரஷ்யா, உக்ரைன் மீதான 2ஆவது நாள் போரை தொடங்கியது.

தலைநகர் கீவில் பயங்கர சத்தத்துடன் கூடிய இரண்டு தாக்குதல்கள் வெள்ளிக்கிழமை காலை நிகழ்ந்தன. இதனால் மக்கள் பாதுகாப்பான இடங்களை நோக்கி தஞ்சமடைந்து வருகின்றன.

முன்னதாக, ரஷ்யாவுக்கு எதிராக உக்ரைன் தனித்துப் போரிட்டு வருவதாகவும் உக்ரைனுக்கு உதவ யாரும் இல்லை என்றும் உக்ரைன் ஜனாதிபதி வொலோடிமீர் ஷெலென்ஸ்கி வேதனை தெரிவித்துள்ளார்.

பொருளாதாரத் தடைகள் போரை நிறுத்தப் போதுமானதாக இருக்காது

ரஷ்யா மீது அமெரிக்கா விதித்துள்ள புதிய பொருளாதாரத் தடைகள் போரை நிறுத்தப் போதுமானதாக இருக்காது என்பதை ஜனாதிபதி ஜோ பைடனும் ஒப்புக்கொண்டுள்ளார். போரை தோற்தெடுத்த புட்டினும் ரஷ்யாவும் அதன் விளைவுகளுக்குப் பொறுப்பேற்க வேண்டும் என பைடன் தெரிவித்துள்ளார்.

இந்தத் தடைகளால் டொலர், யூரோ, பவுண்ட் மற்றும் என் ஆகிய நாணயங்களில் ரஷ்யா வணிகம் செய்ய முடியாது. ரஷ்யாவின் மிகப்பெரிய ஐந்து வங்கிகளுக்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

முதல் நாள் போரில் உக்ரைனின் அரசு மற்றும் இராணுவக் கட்டமைப்புகளைத் தாக்கியதுடன், விமானப் போக்குவரத்தையும் ரஷ்யா முடக்கிவிட்டது. செர்னோபில் அணு உலையையும் ரஷ்யா கைப்பற்றிக்கொண்டது.

பெற்றோல் முதல் கோதுமை வரை விலை அதிகரிப்பு

உக்ரைன் மீது ரஷ்யா போர் தொடுத்ததால் உலகப் பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ளது. அமெரிக்காவில் பெற்றோல்முதல் கோதுமைவரை அனைத்துப் பொருட்களின் மொத்த விலைகளும் உயர்ந்துள்ளன.

உக்ரைன் மீது போர் தொடுத்த ரஷ்யாவுக்கு உலகின் பல நாடுகள் கண்டனம் தெரிவித்துள்ளன. இது ஒரு கொடிய போர் நடவடிக்கை என்றும், ஜரோப்பாவின் அமைதியை ரஷ்யா குலைத்துள்ளதாகவும் நேட்டோ பொதுச் செயலர் ஜென்ஸ் ஸ்டால்டன்பர்க் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, இந்த நடவடிக்கையில் யாரேனும் குறுக்கிட்டால் வரலாற்றில் இதுவரை பார்த்திராத விளைவுகள் ஏற்படும் என ரஷ்ய ஜனாதிபதி புட்டின் எச்சரித்துள்ளார்.

பிரிட்டனின் நிதிச் சந்தையில் ரஷ்ய வணிகம் செய்வதை முடக்க பிரதமர் போரிஸ் ஜோன்சன் நடவடிக்கை எடுத்துள்ளார். அதன்படி ரஷ்ய வங்கிகளின் சொத்துகள் முடக்கப்பட்டுள்ளன.

"போர் வேண்டாம்; அமைதி வேண்டும்" உக்ரைனுக்கு ஆதரவாக போராட்டம்:

இந்நிலையில், உக்ரைன் மக்களுக்கு ஆதரவாக உலகின் பல்வேறு பகுதிகளில் போராட்டம் வெடித்துள்ளது.

இஸ்ரேல் டெல் அவிவில் அமைந்துள்ள ரஷ்ய தூதரகத்திற்கு வெளியே மக்கள் ஒன்றுகூடி போராட்டம் நடத்திவருகின்றனர். அதேபோல், ஜோர்மனி தலைநகர் பேர்லினில் பிராண்டன்பர்க் கேட் முன்பு குவிந்த நூற்றுக்கணக்கான மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

வெடனன் பெய்ருட்டில் அமைந்துள்ள ரஷ்ய தூதரகத்திலும் மக்கள் போராட்டம் நடத்தினர். நியூயோர்க்கின் ஸ்ரம்ஸ் சதுக்கத்தில் நடத்தப்பட்ட போராட்டத்தில், உக்ரைன் மீது நடத்தப்படும்வரும் ஏவுகணை மற்றும் தூருப்களின் தாக்குதலை நிறுத்துமாறு ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டினுக்கு கோரிக்கை விடுத்தனர். அவர்கள் உக்ரேனிய கொடியை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

இதனிடையே உக்ரைனுக்கு ஆதரவாக லுதுவேனியாவில் போராட்டம் நடைபெற்றது. செல்போன் விளக்குகளை ஒளிரச்செய்து உக்ரைனுக்கான ஆதரவை தெரிவித்தனர்.

அதேபோல் வெள்ளை மாளிகைக்கு வெளியே ஆர்ப்பாட்டக்காரர்கள் போராட்டம் நடத்தினார்கள். "ரஷ்யா போரை நிறுத்தவேண்டும்" என அந்நாட்டு ஜனாதிபதி புட்டினுக்கு, அமெரிக்க ஜனாதிபதி பைடன் அழுத்தம் கொடுக்கவேண்டும் எனக் கோரி, வெள்ளை மாளிகைக்கு வெளியேயுள்ள ஃபாயேட்டே சதுக்கப் பூங்காவில் கூடிய ஆர்ப்பாட்டக்கள் "போரை நிறுத்து" என்றும், ரஷ்யா மீது தடைகளை விதிக்கவும் கோரி முழக்கங்களை எழுப்பினர்.

புட்டினுக்கு எதிராக போராட்டம்; 1,800 பேர் கைது

ரஷ்யாவில் ஜனாதிபதி புட்டினுக்கு எதிராக போராட்டம் நடத்திய 1,800இற்கும் மேற்பட்டோரை அந்நாட்டு பொலிஸார் கைது செய்துள்ளனர். உக்ரைன் மீது தாக்குதல்களுக்கு ரஷ்ய மக்கள் கடும் எதிர்ப்புத் தெரிவித்து வருகின்றனர்.

இந்நிலையில், தலைநகர் மொஸ்கோ, செயின்ட்பீட்டர்ஸ்பெர்க் உள்ளிட்ட 56 நகரங்களில் ஜனாதிபதி புட்டினுக்கு எதிராக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

"போர் வேண்டாம், உக்ரேனியர்களுடன் ஒற்றுமை பாராட்டுவோம், உலக அமைதி வேண்டும்" என்று பதாகை மற்றும் கோஷங்களுடன் போரிட்டு வருகின்றனர். போருக்கு எதிரான ரஷ்ய மக்களின் போராட்ட வீடியோக்கள் சமூக வலைத்தளங்களில் வைரலாக பரவி வருகின்றன. இந்நிலையில், போராட்டத்தில் ஈடுபட்ட 1,800இற்கும் மேற்பட்டோரை அந்நாட்டு பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

போராட்டங்களில் ஈடுபடும் ரஷ்யர்களுக்கு எச்சரிக்கை விடுத்துள்ள புட்டின், உக்ரைனில் ரஷ்ய மக்கள் மீது நடத்தப்படும் இனப்படுகொலைகளை தடுக்க ரஷ்யப் படைகள் தாக்குதல் நடத்தி வருவதாக தெரிவித்தார்.

உக்ரைன் கணினிகளை குறிவைக்கும் ரஷ்யா

உக்ரைனில் ரஷ்யப் படைகள் முன்னேறிவரும் நிலையில், உக்ரைனில் ஆயிரக்கணக்கிலான கணினிகளை குறிவைத்து தீங்கிழைக்கும் மென்பொருள் data-wiping software நிறுவப்பட்டுள்ளதாக இணைய பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்துள்ளது.

உக்ரைன் மீது இராணுவத் தாக்குதல் நடத்தி வரும் ரஷ்யா, மறுபுறம் சைபர் தாக்குதலையும் நடத்தி வருகிறது.

இணைய பாதுகாப்பு நிறுவனமான ESTE ட்விட்டரில் வெளியிட்டுள்ள அறிக்கையில், உக்ரைனில் பல கணினிகளை இந்த மென்பொருள் தாக்கியுள்ளது. நாடு முழுவதும் உள்ள கணினிகளில் டேட்டா அழிக்கும் திட்டத்தை ரஷ்யா மேற்கொண்டுள்ளது என தெரிவித்துள்ளது.

ரஷ்யா மீது பயணம், வர்த்தகத் தடை - நியூசிலாந்து

ரஷ்யா மீது பயணம் மற்றும் வர்த்தகத் தடையை நியூசிலாந்து விதித்துள்ளது.

இதுகுறித்து நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் தெரிவிக்கையில், ரஷ்யாவிற்கு பயணம் மேற்கொள்வதை மக்கள் தவிர்க்கவேண்டும். இராணுவம் மற்றும் பாதுகாப்புப் படைகளுக்குத் தேவையான தளவாடங்கள், வர்த்தகத்திற்கு தடை விதிக்கப்படுகிறது.

உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கைகளை ரஷ்யா உடனடியாக திரும்பப் பெறவேண்டும் . அங்கு நிகழவுள்ள பேரழிவுக்கு முட்டுக்கட்டை போட வேண்டும்.

இருதரப்பிலான வெளியுறவுத்துறை ஆலோசனைகள் மற்ற உத்தரவு வரும்வரை தற்காலிகமாக இரத்துசெய்யப்படுவதுடன், மேலும் சில தடைகளை ரஷ்யா மீது விதிக்க உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

அடைக்கலம் தேடி போலந்துக்கு செல்லும் உக்ரைனியர்

உக்ரைன் மீது ரஷ்யாவின் படையெடுப்பால் அங்கிருந்து அண்டைநாடான போலந்துக்கு ஏராளமானோர் அடைக்கலம் தேடச் செல்கின்றனர்.

உக்ரைனிலுள்ள இராணுவத் தளங்கள், அரச கட்டமைப்புகள் மீது ரஷ்யா நேற்றுமுன்தினம் தாக்குதல் நடத்தியது. பொதுமக்கள் குடியிருப்புகளிலும் ஏவுகணைத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதனால் அச்சமடைந்த மக்கள் அண்டைநாடான போலந்துக்கு அடைக்கலம் தேடச் செல்கின்றனர்.

எல்லை தாண்டி வரும் உக்ரைனியர்களைத் தங்கவைக்க போலந்தில் தற்காலிகத் தங்குமுகாம்கள் அமைக்கப்பட்டுள்ளன.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7